விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 29 சனிக்கிழமை (14.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 331

## 16 ஆயிரத்தை கடந்த தொற்றாளர் நேற்றும் +468 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் +468 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 23

சுகாதார நடைமுறையை மீறியதனால்

## செல்வச்சந்நிதி ஆச்சிரமம் 14 நாட்கள் முடக்கப்பட்டது

(கரணவாய்)

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் ஆச்சிரமம் 14 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆலயத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றின்போது சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து சுகாதார உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் இணைந்து குறித்த நடவடிக்கை எடுத்துள்ளனர். 23

16ஆம் திகதி திங்கள்வரை

## அரச காணியை பெற விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஒரு இலட்சம் காணித் துண்டு வழங்கும் நிகழ்ச்சியில் நேற்று வடக்கின் பல பகுதிகளிலும் பிரதேச செயலகங்களில் விண்ணப்பப் படிவங்களை வழங்க பலர் முண்டியடித்தனர்.

தமது விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டமைக்கான எந்தவொரு சான்றுப் படிவங்களும் வழங்கப்படவில்லை என விண் 23

இலங்கைக்கு மேலும் ஒரு அபாயம்

# எலிக்காய்ச்சலும் தீவிரமாகப் பரவுகின்றது

### சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் விஞ்ஞான பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் எலிக்காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் நாட்டு மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

2019ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வரை எலிக் காய்ச்சல் காரணமாக நாட்டில் 4 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டிருந்ததுடன், 50 மரணங்கள் பதிவாகியிருந்தன.

எனினும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதி வரை 6 ஆயிரத்து 900 பேர் எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இத்தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ம-3)




கை கழுவும் திரவங்களை பயன்படுத்தியபின் தீபம் ஏற்றாதீர்

சுகாதார அமைச்சு எச்சரிக்கை

04ஆம் பக்கம் பார்க்க

## அரைச்சதத்தை கடந்த கொரோனா பலி

### இலங்கையில் நேற்றும் 5 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட்-19 நோயால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 23

## பொருளாதாரம் வீழ்ச்சி காணாத விதத்தில் கொரோனாவை கட்டுப்படுத்துகின்றோம்

### சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி காணாத விதத்தில் கோவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் தெரிவித்தார்.

கோவிட் -19 வைரஸ் பரவல் நிலைமையில் நாட்டின் தற்போதைய நடைமுறைகள் குறித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நேற்று பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியினர் கொண்டு 23

## தனிமைப்படுத்தலை மீறியவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 07 பேர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மற் 23

கொரோனாவால் மரணமானவர்களின்

## உடல்களை தகனம் செய்யும் முடிவில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் நபர்களின் உடல்களை தகனம் செய்ய வேண்டும் என்று நிபுணர்கள் குழு எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை என கொரோனாவால் இறக்கும் நபர்களை தகனம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்த நிபுணர்கள் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் மெத்திகா விதானகே 23

## சிறைச்சாலைகளில் 161 பேருக்கு தொற்று

### வெலிக்கடையில் 115 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை பரவல் சிறைச்சாலை கொத்தணியை உருவாக்கியுள்ள நிலையில், இதுவரை கைதிகள் உள்ளிட்ட 161 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

வெலிக்கடை, போகம் பர, மாத்தறை. 23

# ஆலயங்களில் 5 பேருக்கு மேல் ஒன்றுகூட வேண்டாம்

## யாழ். மாவட்ட அரச அதிபர் மீண்டும் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினமான இன்று ஆலயங்களில் பொதுமக்கள் கூட வேண்டாம் என அறிவுறுத்தியிருக்கும் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், கோவில்களில் விரத பூசைகளும் நடைபெறுவதால் கோவில்களுக்குள் 5 பேருக்கு மேல் மக்களை அனுமதிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

தீபாவளி பண்டிகை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தீபாவளி பண்டிகை இன்றைய தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் தற்போது இந்துக் கோவில்களில் விரத பூசைகளும் இடம்பெற்று வருவதனால் பொதுமக்கள் கோவிலுக்கு சென்று ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் இந்து கலாசார திணைக்களத்தினரால் ஆலயங்களுக்குள் 5 பேருக்கு மேல் செல்ல அனுமதிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தில் மக்கள் வீடுகளில் இருந்தவாறு தீபாவளியை கொண்டாடுவது மட்டுமல்லாது ஆலயங்களுக்கு செல்வதையும் தவிர்த்து வீடுகளில் இருந்தவாறு கொரோனா தொற்றிலிருந்து விடுபட வேண்டி இறைவனைப் பிரார்த்திக்குமாறு அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

# மன்னாரில் விபத்து; ஒருவர் படுகாயம்

(மன்னார்)

மன்னாரில் இருந்து பிரதான பாலம் ஊடாக சென்ற டிப்பர் வாகனமும், திருக்கேதீஸ்வரம்- தள்ளாடி பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் தள்ளாடி சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சுமார் 8.15 மணியளவில் மோதி விபத்திற்கு உள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி சென்ற நபர் படுகாயம் அடைந்தார்.

படுகாயம் அடைந்த நபர் மன்னார் மாவட்டச் செயலகத்தில் புள்ளி விபர திணைக்களத்தில் கடமையாற்றுபவர் என தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் கடமையின் நிமித்தம், திருக்கேதீஸ்வரம்- தள்ளாடி பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, மன்னாரில் இருந்து பிரதான பாலம் ஊடாக வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் தள்ளாடிச் சந்தியில் மோதி விபத்திற்கு உள்ளானார்.

இதன் போது குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் வீதிப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

## அனுராதபுரத்தைச் சேர்ந்தோர்

# வல்லைப் பகுதியில் நடைபாதை வியாபாரம்

(கரணவாய்)

அநுராதபுரத்தில் இருந்து வருகை தந்த சிலர் வல்லைப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தை மேற்கொண்டிருந்தனர்.

தகவல் அறிந்து அப்பகுதிக்கு விரைந்த சுகாதார பரிசோதகர்கள், பார்வையிட்ட போது சுகாதார நடைமுறைகள் எவற்றையும் பின்பற்றாமல் வியாபாரத்தில் ஈடுபட்டமையால் உடனடியாக நடைபாதைக் கடைகள் அனைத்தும் அகற்றப்பட்டது.

தீபாவளி தினத்தை முன்னிட்டு வடமராட்சி வல்லைப் பகுதியில் இவ்வாறான நடைபாதை வியாபாரம் அதிகரித்து வருவது வழமை என தெரிவிக்கப்படுகிறது. (ம-03,60)

# யாழ். போதனாவில் நேற்று 304 பேருக்கு பரிசோதனை


## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 304 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வடக்கில் புதிதாக எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளில் குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03,18)

# மரண அறிவித்தல்



## பொன்னையா சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற அரச கணக்காய்வாளர்)

அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் நேற்று (13.11.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற சதாசிவம் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற கற்பகத்தின் அன்புக் கணவரும் சாந்தகுமார் (கனடா), துஷ்யந்தன், சுதர்சன் ( ஆசிரியர் - யா/ சிவப்பிரகாச மகா வித்தியாலயம், தும்பளை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தாரணி (கனடா), தர்மினி (விஸ்வமடு), மீரா (பிரதேச செயலகம் - காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றனுஜன் (கனடா), டிதுர்சனா, சுரபி ஆகியோரின் அன்புப் பேரனும் கனகலிங்கத்தின் (ஓய்வு பெற்ற அரச கணக்காய்வாளர் - கனடா) பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2020) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் த்கனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-690)

சதா பொன்ஸ்,
மாலி சந்தி,
அல்வாய்.

077 618 4689 - சுதா
076 528 4894 - துஷி
+ 16479957368 - சாந்தன்

தகவல்:-
குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
14.09.1950

இறப்பு
14.11.2019

அமரர்

## யோண் செல்லையா ஆதர்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. களஞ்சியக் காப்பாளர்)

ஆண்டு ஒன்று கடந்து போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் அறிவுரை தந்த ஆளுமையின் வழி தொடர்கின்றோம்
விழி நனைந்த விடியல் மனதோரம்
தூங்காத உங்கள் நினைவுகள்...
வைராக்கியம் உங்கள் மனம் - அதில்
வஞ்சகத்துக்கு பெரும் பஞ்சம்
அள்ளி வழங்குவதில் வள்ளல்
இன்று வாயார வாழ்த்திச் செல்கின்றனர்
உங்கள் பாதச் சுவடுகள் எங்கள் பாதையாகின்றது.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

(4640)

குடும்பத்தினர்

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்

## சபையில் கஜேந்திரன் வலியுறுத்து

(கொழும்பு)

**சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கும் கொரோனா வைரஸால் அச்சுறுத்தல் - ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு நிபந்தனையற்று அவர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.**



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கும் கொரோனா வைரஸால் அச்சுறுத்தலும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. தொற்றா நோய் காரணமாகவே பலருக்கு இந்தக் கொரோனாத் தொற்று பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது என ஜனாதிபதியும் கூறியிருக்கின்றார். அந்தவகையில் மிகவும் கொடிய சட்டமாகிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதமிழ் அரசியல் கைதிகளில் பலர் இன்று நீரிழிவு நோய் உட்பட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமையைக் கருத்தில்கொண்டு நிபந்தனையற்று அவர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது குறைந்த பட்சம்பிணையில்சரி அவர்களை விடுவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு

## அங்கஜன் எம்.பி. ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்குகள் 140 ஹெக்டேயர் விவசாய தோட்டங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் வகையில் 60 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் வழங்கப்படவுள்ளது.

"சுபீட்சத்தின் நோக்கு" தொனிப்பொருளின் விவசாயத்தில் முன்னேற்றகரமான பாதையை நோக்கி யாழ். விவசாயிகள் நகர்ந்து செல்ல வழிவகை செய்யும் நோக்கில் கட ந்த 5 வருடங்களை போன்று இந்த வருடமும் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் பரிந்துரைக்கு அமைவாக உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சினால் ஒரு விவசாயிக்கு கூடியளவு 4 விதை உருளைக்கிழங்கு பெட்டி வீதம் வழங்க 7 ஆயிரம் விதை உருளைக்கிழங்கு பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த விதை உருளைக் கிழங்குகள் டிசெம்பர் மாதம் முதல் வாரமளவில் பதிவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

# உயிரிழந்த உறவுகளை அஞ்சலிக்க தமிழ் மக்களுக்குப் பூரண உரிமையுண்டு-சுமந்திரன்

(கொழும்பு)

தமிழ் மக்கள் தமது உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்வதற்கு அவர்களுக்குப் பூரண அதிகாரம் உண்டு. இந்தப் புனித மாதமான கார்த்திகையில் அவர்கள் தமது மரணித்த உறவுகளை அவர்களின் கல்லறைகளுக்குச் சென்று மலர் தூவி அஞ்சலித்து நினைவு கூர்வர். இதை எவரும் தடுக்க முடியாது" என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த அவர்களது உறவுகளை நினைவு கூருகின்றமை மறுக்கப்படுகின்றது. சரியான எந்தக் காரணமும் இன்றி பொலிஸார் நீதிமன்றத்தை நாடி 106 ஆவது சரத்தின் கீழ் பொதுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தலாம் என்ற காரணத்தைக் கூறி நீதிமன்றங்களில் தடை உத்தரவைப் பெறுகின்றார்கள். தற்போது சட்ட அங்கீகாரமற்ற கொரோனா சட்டத்தின் கீழ் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட இவ்வாறான உரிமைகள் மறுக்கப்படலாம்.

தெற்கில் ஜே.வி.பியினர் உயிர்நீத்த தமது கட்சி சார்ந்தவர்களை நினைவுகூர்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால், எமது தமிழ்ப் பிரதேசங்களில் மட்டும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றமை நியாயமற்ற ஒன்று.

தமிழ் மக்களுக்காக உயிர் நீத்தவர்களை நினைவுகூர்கின்ற மாதமே இந்த கார்த்திகை மாதம். இந்தப் புனித மாதத்தில் தமது சகோதரர்கள், பிள்ளைகள் மற்றும் உறவுகளை நினைவுகூர்வதற்கு அவர்களுக்குப் பூரண உரித்து உள்ளது.



பிரிவு 106 இன்கீழ் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தல் என்ற காரணத்தைக் காட்டி நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறுகின்ற செயற்பாட்டை ஏற்கமுடியாது.

தமிழ் மக்கள் பொதுப் போக்குவரத்துக்கோ, ஏனைய மக்களுக்கோ எந்த இடையூறும் விளைவிக்காமல்தான் தமது உறவுகளை அவர்களின் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அங்குள்ள கல்லறைகளில் மலர் தூவி அஞ்சலித்து நினைவு கூர்கின்றார்கள். இதை எவரும் தடுக்க முடியாது. அது அவர்களின் உரிமை" - என தெரிவித்தார். (ஜ-4)

# பாதீடு நிறைவேற்றம்

(குப்பிழான்)

வலி. தெற்குப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் 20 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. வலி. தெற்குப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பான விசேட கூட்டம் நேற்று வெள்ளிக் கிழமை சபையின் தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது.

2021 ஆம் ஆண்டுக்கான வலி. தெற்குப் பிரதேச சபையின் பட்ஜெட்டை தவிசாளர் சபையில் சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து பட்ஜெட் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 11 உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர் என 20 உறுப்பினர்கள் பட்ஜெட்டுக்கு ஆதரவாகவும், ஈ.பி.டி.பியின் நான்கு உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்கள் ஆகியோர் பட்ஜெட்டுக்கு எதிராகவும்வாக்களித்தனர். (ஜ-4-18)

NORTH LANKA IIT & LANKA CITY CAMPUS

ONLINE EDUCATION

பின்வரும் கற்கை நெறிகளுக்கான ஒன்லைன் வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

பாட நெறிகள்

i. B.Sc in Computer Science (Top Up 1 year)
ii. B.Sc in Computer Science ( 3 years)
iii. M.Ed. ( 1 Year)
iv. B.Ed. (Top - Up) 1 Year
v. B.Ed. (3 Years)
vi Ph.D (3 years)
vii . Ph.D in Agriculture Science
viii. M.Sc in Agriculture Science (1 year)
ix . B.Sc in Agriculture Science (Top Up )1 year
x. B.Sc in Agriculture Science (3 years)
xi. B.Sc in Sports Science Top -up (1 year)

North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road Jaffna. 0767504535

# கொழும்பில் பதிவான சில தொற்றுகள் எந்தவொரு தொற்றுகளுடனும் தொடர்பில்லாதவை

## பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**கொழும்பின் மட்டக்குளி, முகத்துவாரம், புளுமெண்டல் கிராண்ட்பாஸ் மற்றும் பொறள போன்ற பகுதிகளில் இருந்து கண்டறியப்பட்ட தொற்றுகள் ஏற்கனவே நாட்டில் ஏற்பட்ட எந்தவொரு கொரோனாத் கொத்துக்களுடனும் தொடர்பில்லாமல் பதிவாகியுள்ளன எனும் அதிர்ச்சி தகவல் வெளிவந்துள்ளது.**

கொரோனாத் தொற்று சமூகத்துக்குள் பரவவில்லை என்று சுகாதார அதிகாரிகள் தொடர்ந்து அளித்து வரும் அறிக்கைகளுக்கு பதிலளித்துள்ள பொதுச்சுகாதார ஆய்வாளர்கள் சம்மேளனம், நாட்டில் பல பகுதிகள் கிட்டத்தட்ட சமூக பரிமாற்ற கட்டத்தை எட்டியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது.

ஊடகமொன்றுக்கு தகவல் அளித்துள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சம்மேளன செயலாளர் எம்.பாலசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள கொரோனாத் கொத்துக்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் கொரோனாத் தொற்றாளிகள் கண்டறியப்படும்போது அங்கே சமூக பரிமாற்றம் நடைபெறுகிறது என்று கூற முடியும்.

இதுபோன்ற தொற்றுக்கள் பதிவாகவில்லை என்று அதிகாரிகள் கூறினாலும் களத்தில் பணியாற்றும் தாங்கள் ஆதாரங்களை சுட்டிக்காட்டியுள்ளதாக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்திலிருந்தும் இதுபோன்ற தொற்றுக்கள் பதிவாகியுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

ஏனைய மாவட்டங்களிலிருந்தும் தொற்றுக்கள் பதிவாகியுள்ள சூழ்நிலையில், மக்கள் மற்றும் அதிகாரிகள் இந்தச் சூழ்நிலையில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தாம் தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாக பாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நாட்டில் உள்ள சுகாதார அமைப்பானது நிலைமையைக் கட்டுப்படுத்த போதுமானது என்றும் அவர் கூறினார். இருப்பினும், இது சரியான கண்காணிப்பு செயல்முறையுடன் செய்யப்பட வேண்டும்.

பயணக் கட்டுப்பாடு முறையாகக் கவனிக்கப்பட்டு சரிபார்க்கப்படாததால் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் என அறிவிக்கப்பட்ட புளுமெண்டல் போன்ற பல பகுதிகள் இன்னும் பாதுகாப்பாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## சுற்றுலாத்துறையினருக்கு நிவாரணம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத்தாக்குதல்கள் மற்றும் கொவிட் தொற்று காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறையினருக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்திற் கமைய வாழ்வாதார மேம் பாட்டுக் குழுவின் முதலாவது கலந்துரையாடல் மாத்தளை யில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள சுற்றுலாத் தளங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஜ-4)

## உயர்தர வெட்டுப்புள்ளி தொடர்பாக அடிப்படை மனித உரிமை மீறல் மனு

(கொழும்பு)

2019 க.பொ.த. உயர்தர பரீட்சை வெட்டுப்புள்ளிகள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்படும் என சோஷலிச மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. மாணவர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் ரங்கன லக்மல் இதனைத் தெரிவித்துள்ளார்.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கு இடையிலான வேறுபாடு காரணமாக பல சிக்கல்கள் எழுந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட இசட் புள்ளி தொடர்பாக பல மாணவர்கள் முறையிட்டுள்ளதாகவும் பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கான இசட் புள்ளிகளை தரம் பிரித்தது எவ்வாறு என்பதை தெளிவுபடுத்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தவறிவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## கை கழுவும் திரவங்களைப் பயன்படுத்திய பின் விளக்குகளை ஒளிரச் செய்யாதீர்கள்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

தீபாவளி பண்டிகை கொண்டாடும் மக்கள், தீப்பற்றக்கூடிய கை கழுவும் திரவங்களைப் பயன்படுத்திவிட்டு, விளக்குகளை ஒளிரச் செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள நிலையில் பெரும்பாலானோர் அல்ஹகோல் அடங்கிய கை கழுவும் திரவத்தை அதிகம் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், இன்று தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுபவர்கள் பட்டாசு, மத்தாப்பு போன்ற பல்வேறு விதமான வெடி வகைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் உள்ளமையினால் தீப்பற்றக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இவ்வாறு தீபற்றக்கூடிய அபாயத்தை குறைப்பதற்காகவே அல்ஹகோல் அடங்கிய கை கழுவும் திரவத்தை கை



உலர்த்தும் வரை தேய்ப்பதற்கு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

வைத்தியசாலைகள் மற்றும் கிளினிக்குகள் போன்ற சுகாதர்ர அமைப்புகளுக்கு பக்றீரியாவைக் கொல்ல உகந்த அல்ஹகோல் செறிவு 70 வீதம் முதல் 95 வீதமாகுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், அமெரிக்க நோய்த்தடுப்பு பாதுகாப்பு நிலையம் மற்றும் இலங்கை நுண்ணுயிரியல் கல்லூரி என்பன கை கழுவ பயன்படுத்தும் திரவம், 60-70 வீதம் அல்லது அதற்கு அதிகபடியான எதனோலை கொண்டிருக்க வேண்டுமென குறிப்பிட்டிருக்கின்றன. இத்தகைய திரவங்கள் இலகுவில் தீபற்றக்கூடியதாகும்.

ஆகவேதான், உடனே தீப்பற்றக்கூடிய சிறிதளவு அல்ஹகோல் அடங்கிய கை கழுவும் திரவங்களைப் பயன்படுத்திவிட்டு ஒளி விளக்குகளை ஒளிரச் செய்வதை தவிர்க்க வேண்டும் என சுகாதார அமைச்சு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கூகுளின் அதிரடி அறிவிப்பால் அதிர்ச்சியில் வாடிக்கையாளர்கள்

(கொழும்பு)

கூகுளில் இலவசமாக வழங்கப்பட்டு வந்த சேவையொன்றுக்கு கட்டணம் அறவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால் கூகுள் வாடிக்கையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த 5 ஆண்டுகளாக கூகுள் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு செய்து கொடுத்திருந்த வசதிகளில் ஒன்று கூகுள் போட்டோஸ்.

இந்த கூகுள் போட்டோஸ் அன்லிமிட்டெட் இலவச சேமிப்பை கொடுத்து வந்தது என்பது குறிப்பிடத்தகக்து. இதனை அடுத்து அடுத்த வருடம் ஜூன் முதலாம் திகதி முதல் கூகுள் போட்டோஸ் அன்லிமிட்டெட் இலவச சேவையை நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது.

இனிமேல் அன்லிமிட்டெட் ஆக போட்டோக்களை சேமித்து வைத்துக்கொள்ள முடியாது என்றும் 15 ஜிபி மட்டுமே புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இலவசமாக சேமித்து வைக்க முடியும் என்றும் அதற்கு மேல் சேமித்து வைக்க வேண்டுமென்றால் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் கூகுள் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு 2021 ஆம் ஆண்டு ஜூன் 1 முதல் அமுலுக்கு வரும் என கூகுள் அறிவித்துள்ளது. இதனால் கூகுள் போட்டோஸ் வசதியைப் பயன்படுத்தி வரும் வாடிக்கையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (ஜ-4)

# அரசாங்கத்தின் வரிக்கொள்கையே பொருளாதார வீழ்ச்சிக்குக்காரணம்

## முஜிபுர் சாடல்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாக தெரிவித்து வந்த அரசாங்கத்தினால், இருந்த பொருளாதாரத்தையும் பாதுகாத்துக்கொள்ள முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்தின் வரிக் கொள்கையே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2020 ஆம் வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் ஆகின்றது. அதிகாரத்துக்கு வரும்போது நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக தெரிவித்து வந்த விடயங்களை பார்க்கும்போது, நாட்டின் பொருளாதாரம் எந்தளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என்பதைக் காண முடிகின்றது. நாட்டின் அனைத்து வருமான வழிகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. ஆனால் அரசாங்கம் பொருளாதார வீழ்ச்சியை கொரோனாவை காட்டி மறைக்க முயற்சிக்கின்றது.

கொரோனாத் தொற்று நாட்டுக்குள் வருவதற்கு முன்னரே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அரசாங்கத்தின் வரிக் கொள்கையின் பிரதிபலிப்பே இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாகும். அரசாங்கத்தின் வருமான வழிகள் குறைவடைந்திருப்பதாக அரசாங்கம் இன்று தெரிவிக்கின்றது. அப்படியானால் எதற்காக வற் வரியில் குறைப்பை ஏற்படுத்தினீர்கள் எனக் கேட்கின்றேன்.

அத்துடன் இன்று கொழும்பு துறைமுகத்தில் பணிகள் செயலிழந்துள்ளன. பொருட்கள் பரிமாற்றல் மற்றும் ஏற்றுமதிகள் அடங்கிய 42 ஆயிரம் பாரஊர்திகள் துறைமுகத்தில் தேங்கி நிற்கின்றன. அதேபோன்று கொழும்பு துறைமுகத்தின் வெளிச் செல்லும் பிரிவில் 25 கப்பல்கள் நங்கூரமிட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் இருக்கும் பொருட்களை துறைமுகத்துக்கு இறக்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

அதனால் இன்று கிழங்கு, வெங்காயம் போன்ற அத்தியாவசிய பொருட்களுடன் துறைமுகத்தை நோக்கி வந்த கப்பலை நிறுத்த இடவசதி இல்லாததனால் தென்னிந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் பொருளாதாரத்தை எவ்வாறு பாதுகாக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தின் கேந்திர நிலையமான கொழும்பு துறைமுகம் இன்று செயலிழந்துள்ளது. அதேபோன்று அரசாங்கம் ஆட்சிக்கு வந்த தினத்தில் இருந்து அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதாக தெரிவித்து வந்திருக்கின்றது.

இதுவரை அதனை செயற்படுத்த முடியாமல் போயிருக்கின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பதாக தெரிவித்து கடந்த மார்ச் மாதத்தில் இருந்து 10 வர்த்தமானி அறிவிப்புகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் தெரிவித்துள்ள எந்தவொரு பொருளினதும் விலை குறையவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# உயிரிழந்த உடலில் 27 நாட்களாக தங்கியிருந்த கொரோனா வைரஸ்

## ஆய்வுக்குழுவின் அதிர்ச்சித் தகவல்

**கொ (கொழும்பு) ரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்த நபரின் சடலத்தில் 27 நாட்களின் பின்னரும் வைரஸ் இருந்ததாக அவுஸ்திரேலிய ஆய்வு குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மெனிந்திக்கா வித்தானகே இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய கொரோனா வைரஸ், சடலத்தில் அல்லது அதற்கு வெளியே நீண்ட காலம் தங்கியிருக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தை தெளிவுபடுத்திய பேராசிரியர் இது தொடர்பில் வெளியிட்ட காணொளி ஒன்று சமூக வலைத்தளத்தில் பலராலும் பரப்பப்பட்டு வருகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இனம், பேதம் மற்றும் அரசியல் தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்தி, கொரோனாவினால் உயிரிழந்தவர்களின் சடலம் தொடர்பில் மாற்று தீர்மானங்கள் எடுக்காமல் விஞ்ஞான ரீதியாக கடுமையாக சிந்தித்து செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் இலங்கையில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் சடலங்களின் தகனங்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு விஞ்ஞான ரீதியாக பதிலளித்தவர், கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலம் புதைப்பதற்கு தகுதியானதல்ல என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# கொரோனாவுக்கான சிகிச்சை நோயாளி வெளியிட்ட தகவல்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படும் நபர் ஒருவருக்கு எவ்வாறு சிகிச்சை வழங்கப்படுகின்றதென பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஐ.டி.எச்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவர் பேஸ்புக் ஊடாக இதற்கான ஆலோசனை வழங்கியுள்ளார்.

நான் கடந்த 7 நாட்களாக சிகிச்சை பெறுகின்றேன். இன்னும் 7 நாட்களில் வீட்டிற்கு சென்று விடுவேன். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் எனக்கு எவ்வித மருந்துகளும் வழங்கப்படவில்லை.

சூடான பானம் மாத்திரமே வழங்கப்பட்டது. தலைவலி ஏற்பட்டால் மாத்திரம் பரசிட்டமோல் மாத்திரை ஒன்று வழங்கப்படுகின்றது.

விசேடமாக சுடு நீரில் உப்பு சேர்த்து தொண்டை கழுவப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஏதேனும் ஒரு பானத்தை பருக வேண்டும். அது கஞ்சி, தேநீர், கொத்தமல்லி அவித்த நீர், சுடு நீர் போன்ற எந்த பானமாக இருந்தாலும் பருக வேண்டும்.

அத்துடன் நாள் ஒன்றிற்கு 2 அல்லது 3 முறை ஆவி பிடிக்க வேண்டும். ஆவி பிடிக்கும் போது ஒரு முறை மூக்கினால் சுவாசித்து வாயினால் ஆவியை வெளியேற்ற வேண்டும். அடுத்த முறை வாயினால் சுவாசத்தை உள் எடுத்து மூக்கினால் வெளியேற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் இடையில் சிக்கியிருக்கும் வைரஸ் வெளியேறி விடும்.

அத்துடன் 30 நிமிடங்களுக்கு ஒருமுறை சவர்க்காரமிட்டு நன்கு கைகளை கழுவ வேண்டும். சானிடைசர் பயன்படுத்துவதற்கு பதிலாக சவர்க்காரம் பயன்படுத்துவது இன்னும் சிறந்தது. உங்களுக்கு கொரோனாத் தொற்றும் என்ற சந்தேகம் இருந்தால், உங்களுக்கான தனியான சவர்க்காரம், துடைப்பான் மற்றும் நீங்கள் பயன்படுத்தும் பொருட்களை தனியாக வைத்துக் கொள்ளுங்கள்.

நாங்கள் உணவு உட்கொள்ளும் நேரத்தை தவிர்த்து ஏனைய அனைத்து சந்தர்ப்பத்திலும் முகக் கவசம் அணிந்திருப்போம். உறங்கும் போதும் அணிந்திருப்போம். ஒரு நாளில் 3 முகக் கவசங்கள் மாற்றுவோம்.

விசேடமாக கொரோனாத் தொற்றிய பின்னர் மனதளவில் தைரியத்துடன் இருக்க வேண்டும். அதுவே கொரோனாவுடன் போராடுவதற்கான சிறந்த ஆயுதமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)


20 ஆம் ஆண்டின் நினைவில்

வாழ்வுக்காக 1960 • 01 • 08

ஓய்வுக்காக 2000 • 10 • 25



அமரர். கந்தப்பு தவராசா (பவா)

திதி:14.11.2020

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒரு தரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்ததிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தேவிடுங்கள் எம்மிடம்!

(C-676)

கரவெட்டி மத்தி, கரவெட்டி.

நினைவுத் துயரில் மனைவி, பிள்ளைகள்.


# சிறைச்சாலைகளிலிருந்து பாராளுமன்றம் வரமுடியாது


## அதிகரிக்கும் தொற்றே காரணம்

(கொழும்பு)

வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் இருந்து பாராளுமன்றம் செல்லும் உறுப்பினர்களை சபை அமர்வுகளில் கலந்து கொள்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமையால் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரேமலால் ஜயசேகர மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் ஆகிய மூவரையும் சபைக்குள் அழைத்து வராமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# வீதிகளை சீர்செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கைதடிப் பகுதியில் உள்ள சில வீதிகளில் மாரி காலத்தில் மழை வெள்ளம் தேங்கி போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாக அப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கைதடி தெற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகம் முன் பாக உள்ள வீதியில் மாரி காலத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்கிறது.

அதேபோன்று கைதடி முத்துக்குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள முத்துக் குமார சுவாமி மகாவித்தியாலயத் திற்கு முன்பாகவும் மழை காலத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனை சீர் செய்ய சாவகச்சேரி பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-30)

# நடைபாதையில் பொருட்கள்; நடக்க சிரமப்படும் மக்கள்



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தையின் நடைபாதை பகுதியில் பொருட்கள் வைப்பதன் காரணமாக மரக்கறி கொள்வனவு செய்ய வரும் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொரோனாத் தொற்று காரணமாக சமூக இடைவெளி பேணப்பட்டுவரும் நிலையில் கொடிகாமம் மரக்கறி சந்தையில் நடைபாதைக்கு என ஒதுக்கப்பட்ட பகுதியில் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் மரக்கறி கொள்வனவுக்கு வரும் பொதுமக்கள் ஒருவருடன் ஒருவர் முட்டிக் கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே இது விடயத்தில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தி சந்தைக்குள் இருக்கும் நடை பாதையை உரியமுறையில் பயன்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென பொது மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-60)

# கலைப்பீட மாணவர் மோதல் விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் கடந்த மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட தனிநபர் ஆயத்தினால் 130 பக்கங்களைக் கொண்ட விரிவான விசாரணை அறிக்கை பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென, பல்கலைக்கழக பேரவையினால் நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆயத்தின் தலைவர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.நடராஜ சுந்தரத்தினால் இந்த விரிவான விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான அறிக்கை அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் தீவிரமாக ஆராயப்பட்டு, விசாரணை அதிகாரியினால் முன்மொழியப்பட்டுள்ள சிபார்சுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையினால் பேரவைக்கு பரிந்துரை முன்வைக்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில், பல்கலைக்கழகத்தின் சகல பீடாதிபதிகளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் முன்மொழியப்பட்ட இரண்டு பேரவை உறுப்பினர்களும் மாணவ ஆலோசகர் ஒருவரும் பிரதிச் சட்ட நிறைவேற்று அதிகாரி (புறொக்டர்) ஒருவரும் போதனைசார் விடுதிக் காப்பாளர்கள் இருவருமாக இருபது பேர் அங்கம் வகிப்பதுடன், பதிவாளரின் நியமனப் பிரதிநிதியாக மாணவர் நலச் சேவைகளுக்கான உதவிப் பதிவாளர் செயலாளராகவும் செயற்படுகின்றார்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி கலைப்பீடத்தின் இரண்டாம் மூன்றாம் வருட மாணவர் களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு முற்றி மோதலாகியிருந்தது. அன்று மாலை வளாகத்தினுள் இடம்பெற்ற மோதலின் போது சமரசம் செய்ய முற்பட்ட பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்ட மூன்றாம் வருட மாணவர்கள், துணைவேந்தர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தம்மைத் தாக்கியதாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

எனினும் உடனடியாகவே மாணவர்கள் மத்தியில் பேசிய துணைவேந்தர், தான் உட்பட அனைவரையும் விசாரணை செய்யும் வகையில் சம்பவம் குறித்து விசாரிப்பதற்குச் சுயாதீன விசாரணைக்குழு ஒன்று பேரவையினால் அமைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார்.

மறுநாள் 9 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழகப் பேரவை வணிக முகாமைத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் ஓய்வு நிலைப் பேராசிரியருமான மா.நடராஜ சுந்தரத்தை விசாரணையாளராகக் கொண்டு தனிநபர் விசாரணை ஆயம் ஒன்றினை நியமித்திருந்தது.

தாக்குதல் சம்பவத்தின் போது அவ்விடத்தில் நின்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பாதுகாப்பு ஊழியர்களும் சாட்சியமளித்திருந்தனர். அதன் பின், சம்பவம் தொடர்பில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டாம் வருட மற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் சாட்சியமளித்திருந்தனர். அதன் பின்னர் கலைப் பீடாதிபதியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது. (5-4-33)

# வீதியில் வெள்ளம் போக்குவரத்தில் சிரமம்



(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள கடைத் தொகுதி வீதியில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளது. இவ் வீதியில் வாய்க்கால் இல்லாத காரணத்தினால் மழை வெள்ளம் ஓட முடியாது தேங்கி நிற்கிறது.

இவ் வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டன. வெள்ளம் தேங்கி நிற்பதனால் பொதுமக்கள் வீதியால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் தங்க வேலாயுதம் ஐங்கரனின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனையடுத்து அவர் அவ் வீதியை நேரில் சென்று பார்வையிட்டதுடன் இவ் விடயம் தொடர்பாக கவனம் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இவ் வீதியை விரைவாக சீர் செய்து தருமாறு பொது மக்களும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் கேட்டுக் கொண்டனர். (5-4-60)

# கொரோனாவின் தாக்கம் வெறிச்சோடிய யாழ்.நகரம்



(யாழ்ப்பாணம்)

வழமையாக தீபாவளி பண்டிகையின் முதல் நாள் சனக்கூட்டத்தால் யாழ்.நகரம் நிரம்பி வழியும் நிலையில், நேற்று யாழ்.நகரம் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. புடைவைக் கடைகள் மற்றும் ஏனைய கடைகளிலும் பொதுமக்களின் வரவு குறைவாக காணப்பட்டது.

தற்போது நாட்டில் உள்ள கொரோனா சூழ்நிலை காரணமாக வீடுகளிலிருந்து தீபாவளியைக் கொண்டாடுமாறு சுகாதாரப் பிரிவினர் மற்றும் மதத் தலைவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறை தீபாவளி வியாபாரம் குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (5-4-33)

# எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்

## கொரோனா விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

கலாநிதி அகிலன் முத்துக் குமாரசாமியின் அனுசரணையில் தென்மராட்சி சேவை நிறுவனம் சாவகச்சேரி நகரப் பகுதியில் "எம்மவர் உயிர்களை நாமே பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் கொரோனா விழிப்புணர்வு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெடுத்திருந்தது.


நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சரவண பவன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், உப தவிசாளர் பாலமயூரன், சசிகலா ரவிராஜ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு இலவச முகக் கவசங்களை வழங்கியதுடன், கொரோனா தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி இருந்தனர். (5-4-30)

# அர்த்தமறிந்து தீபாவளியை கொண்டாடுவோம்

சைவசமயத்துக்கு ஒவ்வாத வகையில், தீபாவளித் தினத்தில், மாமிசம் புசித்தல், மது அருந்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரது தொகை அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. சில நீரிழிவு நோயாளிகள் "திருமணம், பூப்பு நீராட்டல் போன்ற வைபவங்களில், கட்டுப்பாடின்றி உண்ணலாம் - ஐஸ்கிறீம் குடிக்கலாம்" என்று கூறி, அவர்களே அவர்களை ஏமாற்றிக் கொண்டு, கட்டுப்பாடின்றி உணவருந்துவார்கள். இவர்களைப் போலவே, மதுப் பிரியர்கள் சிலர், தீபாவளித் தினத்தன்று வீட்டிலேயே மது அருந்தலாம். மது அருந்திவிட்டு ஆலயத்துக்கு செல்லலாம் என்று கூறிக்கொண்டு, மது அருந்திவிட்டு மதுபோதையில் இருப்பதும், ஆலயத்துக்கு செல்வதும் அவதானிக் கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வது தவறு என்பதை சைவசமயிகளுக்கு உணர்த்தவேண்டியது அவசிய மாகிறது. இந்தப் பழக்கம் பெருகாமல் பார்ப்பதற்காக சைவசமய அபிமானிகள் பலர் சென்ற வருடம் தீபாவளி சமயத்தில் தீபாவளியின் தத்துவம் பற்றி எழுதியிரு ந்தார்கள்.

தீபாவளி தினத்தில், சைவசமயத்துக்கு ஒவ்வாத வகையில் மாமிசம் புசித்தல், மது அருந்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாது தடுப்பதற்காக, சென்ற வருடம் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக, ஆலயங்க ளிலும் பொது இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளக்கங்களை மக்கள் வாசித்துவிட்டு மறந்து போயிருப்பார்கள். அவற்றை மீள நினைவூட்டினால் தான் அவை மக்கள் மனங்களில் பதியும் - நிலைத்து நிற்கும் என்பதால் அவற்றில் சிலவற்றை தொகுத்து, வாசகர்முன் சமர்ப்பிக்கிறேன்.

மனித மனங்களிலுள்ள கெட்ட குணங்களை அகற்றி மனிதர்களை நல்லவர்களாக வாழவைப்பதற் காக கெட்ட குணங்களை நரகாசுரன் (நர அசுரன் என்ற பல தலைகளையுடைய அசுரனாகவும், 120 தலை களையுடைய காளிங்கனாகவும் உருவகப்படுத்தி, கிருஷ்ணன் அளித்ததாக புராணக் கதைகளும் எழு தப்பட்டிருந்தன. கெட்ட குணங்கள் பல இருப்பதால் நரகாசுரனுக்கு தீபாவளி என்று ஒரு தினத்தை




நிர்ணயித்ததுபோல காளிங்கனுக்கு ஒரு தினம் நிர்ணயிக்கப்படவில்லை.

**1. தீபாவளித் தினத்தில், மாமிசம்புசித்தல், மது அருந்துதல் மோசமான பாபச் செய்ல்கள்** ஆகும்.

**2. தீபம்+ஆவளி = தீபாவளி என்றும், தீபாவளி என்பது தீபவரிசை** என்பதை குறிப்பிட்டு, தீபாவளித் தினத்தன்று மாலையில் சைவ இல்லங்களில் தீபங் களை ஏற்றி வரிசையாக வைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

**3. நரர்+அகம்+அசுரர் = நரகாசுரர் என்றும், நரர் என்றால் மனிதர்கள் என்றும் அகம் ஏ்ன்றால் மனம் என்றும், அசுரர் என்றால் மாசுகள் என்றும், இவற்றை சேர்த்து - நரகாசுரர் என அழைக் கப்படுகிறது. நரகாசுரன் என்பது, மனமாசுகளை (கெட்ட குணங்களை) குறிப்பிடுகிறது என்றும் அறியவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நரகாசுர சம்காரம் என்றால் மனித மனங்களில் இருக்கக்கூடிய கெட்ட எண்ணங்களை அகற்றுதல்** என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

4. மனித மனமாசுகளாக (அசுரகுணங்களாக) பதினைந்து மாசுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவை யாவன,

**1. மதுஅருந்துதல், 2. பொறாமை, 3. பழிவாங்கல், 4. சதிசெய்தல், 5. முற்கோபம், 6. தவறான காம நடத்தை, 7. தற்பெருமை, 8. பிறரை நிந்தித்தல், 9. களவு, 10. பொய்பேசுதல், 11. இட்டுக்கட்டி, வசைகூறுதல், 12. இலஞ்சம் வாங்குதல், 13. புறங்கூறல்,14. வதந்திகள் பரப்புதல், 15. கோள்மூட்டுதல்**

**5. தீபாவளித்தினத்தில் செய்யவேண்டிய கருமங்களாக பின்வருவன குறிப்பிடப்பட்டி ருந்தன.**

1.மேற்குறிப்பிட்ட மாசுகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மனதில் வைத்திருப்பவர்கள், தீபாவளி தினத்தன்று காலையில், வீட்டிலிருக்கும் சுவாமிப் படத்தின் முன்னால் நின்று, மனத்தை ஒருநிலைப்படுத்துவதற்காக பலதடவை் குட்ட வேண் டும். அதன்பின் - தியானம்செய்து, மனத்தை ஒரு நிலைப்படுத்தியபின், மனமாசுகளை அகற்றுவதாக சத்தியப்பிரமாணம் செய்து, மனிதமன மாசுகளை (அசுரகுணங்களை) அகற்றல்.

2.நரகாசுர சம்காரம் நடைபெறும் கோவில் அருகில் இருந்தால் அங்குசென்று, நரகாசுர சம்காரத்தை பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்புதல்.

3.மரணச் சடங்கில் பங்குபற்றியதாக எண்ணி நீராடல் - தோய்தல்.

4.புத்தாடை அணிதல்

5.மனமாசுகள் இல்லாத புனிதர்களாக, புத்தாடை புனைந்து கோவிலுக்குச்சென்று சுவாமிதரிசனம் செய்தல்

6.குடும்பத்துடன் கூடியிருந்து சைவ உணவருந் துதல்.

7. மாலையில் தீபூங்களை ஏற்றி வரிசையாக (தீபாவளி) வைத்தல்.

**இவ்வருடம் தீபாவளித் தினத்தன்று இவற்றை முறையாகச் செய்து, தீபாவளியின் அர்த்தத்தை அறிந்து கொண்டாடுவோமாக!**

**ச.ஆ.கோபாலமூர்த்தி**
**நலவாழ்வு ஆலோசகர்**

# நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக
# அரசுடன் இணைந்து பணியாற்றுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் திட்டவட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவுக்கும் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும் இடையேயான விசேட சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக த்தில் நடைபெற்றது. இதன் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா பேரழிவை தோற்கடிக்க எதிர்க்கட்சி தனது நிபந்தனையற்ற ஆத ரவை அரசாங்கத்திற்கு அளிக்கும் என் றும், கட்சிபேதங்களை பொருட்படுத்தாது, நவீன எதிர்க்கட்சியாக நாட்டின் மக்களு க்காக பணியாற்றுவோம் என்றும் சஜித் பிரேமதாஸ பிரிட்டிஷ் உயர்ஸ் தானிகரிடம் சுட்டிக்காட்டினார்.



எவ்வாறாயினும், கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கத்தின் சில குறைபாடுகள் குறித்து தொடர்ந்து கவனம் செலுத்துவதாகவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே எதிர்க் கட்சியின் ஒரே நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)


## மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்றங்களில் 2021ஆம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறு வனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
2. மாவட்ட/நீதவான் நீதிமன்றம் -ஊர்காவற்றுறை

எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா.100.00 ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா.5,000.00 ஐயும் செலுத்தி 09.12.2020 புதன்கிழமை பி.ப 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 09.12.2020 பி.ப 2.00 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப 3.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சிற்றுண்டிச்சாலை சேவை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**அன்னலிங்கம் பிரேமசங்கர்**
**மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி/ தவிசாளர்,**
**மேல் நீதிமன்ற பெறுகைக்குழு,**
**மாகாண மேல் நீதிமன்றம்,**
**வடமாகாணம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-683)



## மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்.மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வதற்குரிய 2021 ஆம் ஆண்டுக்கான கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம் (புதிய திறந்த நீதிமன்றம் உட்பட)
2. மல்லாகம் நீதிமன்ற வளாகம்
3. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
4. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்
5. பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்
6. யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்ற வளாகம்

எனவே சுத்திகரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றக் கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா. 200.00 ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா.25.000.00 ஐயும் செலுத்தி 09.12.2020 புதன்கிழமை பி.ப 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 09.12.2020 பி.ப 2.00 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப 3.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னில்லையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**அன்னலிங்கம் பிரேமசங்கர்**
**மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி/ தவிசாளர்,**
**மேல் நீதிமன்ற பெறுகைக்குழு,**
**மாகாண மேல் நீதிமன்றம்,**
**வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

(C-683)

# வன்னி கட்டளைத் தளபதி அரசாங்க அதிபர் சந்திப்பு

(குருமன்காடு)

வன்னி படைகளின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேனவுடன் கலந்துரையாடியுள்ளார்.

வன்னி படைகளின் புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். அதன்பின் வவுனியா மாவட்ட அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள்தொடர்பில் அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபருடன் கலந்துரையாடியிருந்தேன். இராணுவ தளபதியின் வழிகாட்டலின் கீழ் கொவிட்-19 தாக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முப்படையினரும் ஈடுபட்டுள்ளனர். வவுனியாவிலும் பாதுகாப்பு தரப்பினர் மாவட்ட செயலகத்துடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன், வன்னியில் உள்ளது போன்றே நாடு முழுவதும் இராணுவத்தினர் உள்ளனர். கொறொனாத் தொற்று ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பாதுகாப்பிற்காக கொழும்பு முழுவதிலும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இதுபோன்றே நாடு முழுவதும் இராணுவத்தினர் செயற்படுகின்றனர். வன்னியில் மட்டும் இராணுவத்தினர் செயற்படவில்லை எனத் தெரிவித்தார்.(5-4-250)

# கரையோரப் பகுதியில் கண்டல் தாவரங்கள் நாட்டப்பட்டன

(மன்னார்)



கடல் வளங்களை பாதுகாக்கும் வகையில் மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நருவிலிக்குளம் கடற்கரையோர பகுதியில் கண்டல் தாவரங்களை நடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட கடல் சார் சூழல் பாதுபாப்பு அதிகார சபையின் பொறுப்பதிகாரி ஏ.சசிதரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் திருமதி தஸ்சினி லகந்தபுர, கடல் சார் சூழல் பாதுபாப்பு அதிகார சபையின் வடக்கு,கிழக்கு பொறுப்பதிகாரி ரி.சிறிபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நருவிலிக்குளம் கடற்கரையோர பகுதியில் முதல் கட்டமாக 300 கண்டல் தாவரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

இதில் கிராம உத்தியோகத்தர், பொலிஸ் அதிகாரி, வன வளத்திணைக்கள அதிகாரிகள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டு கண்டல் தாவரங்களை நாட்டிவைத்தனர்.(5-4-285)

# பாடசாலையில் திருட்டு

(தருமபுரம்)

கிளிநொச்சியிலுள்ள கல்மடு பாடசாலையில் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் அண்மையில் பாடசாலையின் பாவனையில் இருந்த புல்வெட்டும் இயந்திரம் ஒன்றும் களவாடப்பட்ட உள்ளது என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் கடந்த சனிக்கிழமை நிழல் பிரதி எடுக்கும் இயந்திரம் திருட்டு போயுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர். (5-316)

# மக்கள் கூடுவதால் கொரோனா பரவும் அச்சம்

(குருமன்காடு)

வவுனியா, மரக்கறி மொத்த விற்பனை நிலையத்தில் மக்கள் கூடுவதன் காரணமாக கொரோனா அச்சம் ஏற்படாதா? என வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் த.சுஜீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

கொரோனாத் தாக்கமானது பரவலாக அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் அங்கமாக சுகாதார திணைக்களத்தினரால் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தாக்கம் குறித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ள சுகாதார பரிசோதகர்கள் உணவகங்களில் அமர்ந்து உணவு உண்பதற்கு தடை விதித்துள்ளதுடன், அவர்கள் உணவுகளை மட்டும் விற்பனை செய்ய அனுமதி வழங்கியுள்ளனர். சன நெரிசலைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் தினமும் காலையில் வவுனியா இலுப்பையடியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத்தில் சுகாதார நடைமுறைகள் முழுமையாக பின்பற்றாது அதிகளவிலான விவசாயிகள், மரக்கறி விற்பனையாளர்கள் வந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.(5-4-250)

# வவுனியா பிரதேச செயலகத்தில் குவிந்த இளம் தொழில் முயற்சியாளர்கள்

(குருமன்காடு)




காணி முகாமைத்துவ அலுவல்கள் அரச தொழில் முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு இலட்சம் இளம் தொழில் முனைவோர்களுக்கு இலவச காணித்துண்டுகள் வழங்குவதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை 15 ஆம் திகதி ஆகும்.

இதனையடுத்து நேற்றுக் காலை தொடக்கம் மதியம் வரையிலான காலப்பகுதியில் 300 இற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பப்படிவத்தினை ஒப்படைப்பதற்காக வவுனியா பிரதேச செயலகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

கொவிட் - 19 தொற்று மற்றும் மக்களின் அசௌரியங்களை குறைக்கும் வகையில் வவுனியா பிரதேச செயலக ஊழியர்கள் செயலக வாயிலில் நின்று இலவச விண்ணப்பப் படிவங்களை விநியோகம் செய்ததுடன் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொண்டனர். (5-4-250)

# மின் கம்பங்களால் அச்சமடையும் மக்கள்



(நெளுக்குளம்)

வவுனியா குடியிருப்பு கித்துள் வீதியில் அமைந்துள்ள பழைமையான மின் கம்பங்களால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மத்தியில் அச்சமான நிலை காணப்படுகிறது.

அதிக மக்கள் நடமாட்டமுள்ள கித்துள் வீதியில் நாட்டப்பட்டுள்ள இரும்பினாலான மின்சார கம்பங்களின் அடிப்பகுதி சேதமடைந்த நிலையில் உள்ளன.

இக்கம்பங்களில் சில ஒருபக்கம் சரிந்த நிலையில் வீதிக் கரைகளில் நிற்கின்றமையால் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களும் பயணிகளும் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த இரும்புக் கம்பங்கள் 40 வருடங்களிற்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளதுடன், அது சேதமடைந்து செல்லும் நிலையிலும் புதிய தூண்கள் இதுவரை நாட்டப்படவில்லை.

எனவே அதிக மக்கள் நடமாட்டம் கொண்ட வீதி என்பதைக் கருத்தில் கொண்டு அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெறுவதற்கு முன்னர் குறித்த இரும்புக் கம்பங்களை அகற்றி புதிய கம்பங்களை நாட்டுவதற்கான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-299)

# பிரதேச சபை பாதீடு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று இறுதியில் அனைத்து உறுப்பினர்களதும் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டுள்ளது

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பிலான சபையமர்வும் மாதாந்த அமர்வும் பிரதேச சபை தவிசாளர் ஆ.தவக்குமாரன் தலைமையில் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் தவிசாளர் ஆ.தவக்குமாரன் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குரிய அடுத்த ஆண்டுக்கான வருமானமாக சுமார் 95 மில்லியன் ரூபாய்களை எதிர்பார்ப்பதாகவும் அதன் அடிப்படையில் இந்த 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் இந்து மயானங்கள் புனரமைப்பு, வீதி புனரமைப்பு,கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துதல், வீதி விளக்கு போடுதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை உள்ளடக்கியதாக 28.5 மில்லியன் ரூபாவுக்கு வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.(5-4-281)

# இராசிபலன்

14.11.2020
ஐப்பசி 29, சனிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 2.10 மணிவரை
சுவாதி முன்னிரவு 8.47 மணிவரை
சுபநேரம் 3.07 - 4.37 மணிவரை
இராகுகாலம் 9.07 - 10.37 மணிவரை
சந்திராஷ்டமம்:- உத்திரட்டாதி, ரேவதி
அமாவாசை, கேதார கௌரி விரதம்
தீபாவளிப் பண்டிகை

வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


ரிஷபம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உற்சாகமான நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


மிதுனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கடகம்

நம்பிக்கைகள் நடைபெற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்களின் சந்திப்புண்டு.


சிம்மம்

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


கன்னி

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.


துலாம்

வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், போசன நன்மையுண்டு.


விருச்சிகம்

காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.


தனுசு

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், எண்ணங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.


மகரம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


கும்பம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், இறைவழிபாட்டில் இன்பம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


மீனம்

குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள்.

எல்லாரும் பார்த்து இரசிக்கும் மலர்போல வாழக் கற்றுக்கொள்.

# தொலைக்கல்வி பாடங்களை பாடசாலைகள் மூலம் பெறலாம்

**தொ (கொழும்பு) லைக்கல்வி முறையின் மூலம் மீள ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பாடசாலை தொலைக்கல்வி நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாமல் போகும் மாணவர்களுக்கு, பாடவிதானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பாடங்களை தமது பாடசாலைகள் ஊடாகப் பெற்றுக்கொள்ளும் முறை வகுக்கப்பட்டுள்ளது.**

கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள கல்வி நடவடிக்கைகளை தொலைக்கல்வி முறையின் மூலம் மீள ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டு வேலைத் திட்டம். தொடர்பாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக நாளை 15 ஆம் திகதி முதல் இந்த விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள




தாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தரம் மூன்றில் இருந்து கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரம் வரையான வகுப்புக்களின் பாடங்களை பூர்த்தி செய்யும் வகையில், பிரபல ஆசிரியர் குழாமின் பங்கேற்புடன் குறிப்பிட்ட பாடங்களைத் தொகுத்து ஒலிப்பதிவு செய்யும் நடவடிக்கை இந்நாட்களில் இடம்பெறவுள்ளன.

இதன் பின்னர் தொலைக் காட்சி மற்றும் வானொலி ஊடாக வாரத்தில் 7 நாட்களும் வீட்டில் இருந்தவாறு மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்க சந்தர்ப்பம் கிட்டும். தமிழ் மற்றும் சிங்கள மொழிமூல மாணவர்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# அஞ்ஞான இருளகற்ற தீபங்கள் ஏற்றி அறிவொளி பரப்புவதே தீபாவளி

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

முழு உலகமும் கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக பல்வேறு பாரிய பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்துள்ள இச் சந்தர்ப்பத்தில் தீபத்திருநாளில் வழிபாட்டுக் கிரியைகளில் ஈடுபடுவது மனித உள்ளங்களுக்கு அமைதியைத் தரும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தீபாவளித் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகெங்கிலும் வாழும் இந்துக்கள், தீபாவளி பண்டிகை தினமான இன்று, அஞ்ஞான இருளகற்றி அறிவொளி பரப்பும் எதிர்பார்ப்புடன் தீபங்கள் ஏற்றி வழிபாடுகளில் ஈடுபடுவர்.

தீபத் திருநாளானது அனைத்து உள்ளங்களிலும் இருள் நீக்குவதுடன், தாம் ஒளிபெற்று நல்வாழ்வு வாழ்வதற்கான பிரார்த்தனையுடன், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறி - அன்பையும் மகிழ்ச்சியையும் அவர்கள் தமக்குள் பகிர்ந்துகொள்ளும் கலாசார விழா என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அந்த வகையில் இன மற்றும் சமய நல்லிணக்கத்தையும் பரஸ்பர புரிந்துணர்வையும் மனிதர்களிடையே மேம்படுத்துவதற்கு இத்தகைய இறை நம்பிக்கை சார் விழாக்கள் பெரிதும் உதவும் என்பது எனது நம்பிக்கையாகும்.

அந்த அமைதிக்காக, எமது நாட்டிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்துக்களும் ஒரு மனதாக - கடவுளுக்காக - அர்ப்பணிப்புகளைச் செய்வர் என்பது எனது நம்பிக்கையாகும்.

அது சிறந்ததோர் சமூகத்தையும் ஆரோக்கியமான வாழ்வையும் கட்டியெழுப்பும் எமது நோக்கத்திற்கும் ஆசீர்வாதமாக அமையும் என்றே நான் எண்ணுகின்றேன்.

இந்த தீபத் திருநாள் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் அவர்கள் எதிர்பார்க்கும் உள அமைதி கிடைக்க பிரார்த்திக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# 36 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 31 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10.30 மணியளவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு தொழில் வாய்ப்புக்காக சென்றிருந்த 20 பேர் டுபாயிலிருந்தும் 16 பேர் ஜப்பான் நரிட்டோவிலிருந்தும் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்த அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

18



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### திறந்த முதன்நிலை வாக்கெடுப்பு (Open Primaries)

ஒரு திறந்த முதன்நிலை (Open Primaries) வாக்கெடுப்பில் வாக்களிக்க விரும்பும் வாக்காளர்கள் ஒரு அரசியல் கட்சியுடன் இணைந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் ஒரு கட்சியின் வாக்குச்சீட்டைத் தேர்ந்தெடுத்து அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்திற்கு வாக்களிக்கலாம். ஒரு கட்சியின் வாக்காளர் மற்றைய கட்சிக்கும் வாக்களிக்கலாம். வாக்காளர் பதிவு படிவத்தில் கட்சிகளைத் தேர்ந்தெடுக்க வாக்காளர்களைக் கேட்காத மாநிலங்கள் "திறந்த முதன்நிலை வாக்கெடுப்பு" மாநிலங்கள் ஆகும்.

இந்த வகையில் வாக்காளர்கள் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையில் தேர்வு செய்யலாம். இந்த முறை வாக்காளர்களுக்கு அதிகபட்ச நெகிழ்வுத் தன்மையை அளிக்கிறது. கட்சி எல்லைகளை கடக்க அனுமதிக்கிறது. மற்றும் அவர்களின் தனியுரிமையை பராமரிக்கிறது என்று ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

முதல்நிலை வாக்கெடுப்புகளும், கட்சிக் குழுக்கூட்டங்களும் பெப்ரவரி மாதத்தில் நியூ ஹாம்ப்ஷயர் மற்றும் ஐயோவா மாநிலத்தில் தொடங்கி, ஜூன் மாதத்தில் கலிபோர்னியா மாநிலத்தில் முடிவடைகின்றன.

**குறிப்பு-** 1796-1824 க்கு இடையில், காங்கிரஸில் இருந்த கட்சி உறுப்பினர்கள் தமது கட்சிக் குழுக் கூட்டங்களில் ஜனாதிபதி மற்றும் துணைத் தலைவருக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தனர். அப்போது அவை பொது மக்களுக்கு மூடப்பட்டிருந்தன. அதன் பின் மாநிலங்களின் வாக்காளர்களின் பங்களிப்பை ஏற்படுத்த கட்சிக் குழுக்கூட்டங்கள் மற்றும் திறந்த மாநாடுகள் வழிவகுத்தன. 1800களின் பிற்பகுதியிலும், 1900களின் முற்பகுதியிலும் முற்போக்கு சகாப்தத்தின் போது, கட்சி நியமன செயற்பாட்டில் வாக்காளர்களின் பங்களிப்பை அதிகரிக்க ஒரு இயக்கம் இருந்தது. ஆதரவாளர்கள் வேட்பாளருக்கு மிகவும் வெளிப்படையான, பொது வாக்களிக்கும் செயல் முறையை வைத்திருப்பது கட்சிக் குழுக்கூட்டங்கள் முறையை விட குறைவான ஊழல் நிறைந்ததாக இருக்கும் என்று நம்பினர். எனவே முதல்நிலை வாக்கெடுப்பு முறை பின்பற்றப்படத் தொடங்கியது.

### சுப்பர் செவ்வாய்

சுப்பர் செவ்வாய் என்பது பெப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் அமெரிக்காவின் ஜனாதிபதி முதன்நிலை வாக்கெடுப்புத் தேர்தல்கள் (Primaries) நாளாகும். அமெரிக்க மாநிலங்கள் அந்நாளிலேயே அதிக எண்ணிக்கையிலான முதன்நிலை வாக்கெடுப்புத் தேர்தல்களையும் கட்சிக் குழுக்கூட்டங்களையும் (Caucus) நடத்துகின்றன. ஜனாதிபதி நியமன மாநாடுகளுக்கான அனைத்து பிரதிநிதிகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர்கள் சுப்பர் செவ்வாயன்று தெரிவு செய்யப்படுகிறார்கள்.

### அமெரிக்க ஜனாதிபதி நியமன மாநாடு / கட்சிகளின் தேசிய மாநாடு

அமெரிக்க ஜனாதிபதி நியமன மாநாடு என்பது அமெரிக்காவில் ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் ஒரு அரசியல் மாநாடு ஆகும். இது அடுத்து வரவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களை களமிறக்கும் பெரும்பாலான அரசியல் கட்சிகளால் நடத்தப்படுகிறது. அத்தகைய மாநாட்டின் முறையான நோக்கம், ஜனாதிபதியாக தேர்தலுக்கு கட்சியின் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பது. அதேபோல் கட்சி கொள்கைகள் மற்றும் கட்சி மேடை என அழைக்கப்படும் குறிக்கோள்களின் அறிக்கையை ஏற்றுக்கொள்வதும், ஜனாதிபதி நியமன செயல்முறை உட்பட கட்சியின் நடவடிக்கைகளுக்கான விதிகளை ஏற்றுக் கொள்வதும் ஆகும்.

1972 ஆம் ஆண்டு முதல், ஜனாதிபதி நியமன மாநாடுக்கு முன்னரே ஜனாதிபதி வேட்பாளர்கள் பெரும்பாலும் மாநில முதன்நிலை வாக்கெடுப்புக்கள் மற்றும் கட்சிக் குழுக்கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள் . இதனால் இம் மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைக்கப்பட்டவரை அனுமதிக்கிறது. எவ்வளவு பேராளர்கள் பெற்றால் கட்சியின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் உரிமை கிடைக்கிறது

### பேராளர்கள் (delegates) என்றால் யார்?

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், முக்கிய அரசியல் கட்சிகள், மாநிலத்தின் கட்சி வாக்காளர்களிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் நியமன தேசிய மாநாட்டிற்கு பிரதிநிதிகளை முதன்நிலை வாக்கெடுப்பு மற்றும் கட்சிக் குழுக்கூட்டங்களின் மூலம் தேர்ந்தெடுக்கின்றன, இப்பிரதிநிதிகள் பேராளர்கள் (delegates) என அழைக்கப்படுகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தேர்வுமுறையில் ஒவ்வொரு கட்சியும், ஒவ்வொரு விதமான கணக்கீட்டைப் பின்பற்றுகிறது. முதலில், பேராளர்களிலேயே தேர்ந்தெடுக்கப்படுபவர் மற்றும் கட்சி உறுப்பினர்கள் என்று பிரிவுகள் இருக்கின்றன. அதிலும், எண்ணிக்கையில் இரு கட்சிகளும் மாறுபடுகின்றன. அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதமும் மாறுபடுகிறது.

### குடியரசுக்கட்சியின் ( Republican Party ) பேராளர்கள் தேர்வுமுறை:

குடியரசுக் கட்சியில் மூன்றுவிதமான பேராளர்கள் உள்ளனர். அவர்கள் மாவட்டப் பேராளர்கள் (district delegates), மாநிலப் பேராளர்கள், குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் (Republican National Committee Members) ஆவர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று பேராளர்கள், வழங்கப்படுகின்றனர். இதில் எந்த மாவட்டம் குடியரசுக்கட்சிக்கு அதிகம் வாக்களித்தது, எது வாக்களிக்கவில்லை என்று கணக்குப்பார்த்து அதிகமாகவோ, குறைவாகவோ பேராளர்கள் வழங்கப்படாது ஒரே சீராகவே எண்ணிக்கை அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறைந்தது பத்து மாநிலப் பேராளர்கள் வழங்கப்படுகிறார்கள். அந்த மாநிலத்தில் குடியரசுக் கட்சி ஆளுநர், செனட்டர், கட்சிப் பெரும்பான்மை இவற்றைப் பொறுத்து, அதிக பிரதிநிதிகள் வழங்கப்படுகிறார்கள்.

இதுபோக குடியரசுக்கட்சி செயற்குழு உறுப்பினர்கள் (Republican National Committee) அனைவரும் தானாகவே பேராளர்கள், ஆகிறார்கள். இவர்கள் வாக்குறுதியளியா பேராளர்கள் (Unpledged delegates) எனப்படுகின்றனர். இவர்கள் தங்களுக்கு வேண்டிய கட்சி வேட்பாளரை ஆதரிக்கலாம். ஒரு வேட்பாளர் தேர்தலில் அதிக வாக்குகள் பெற்றாலும், இவர்கள் அந்த வேட்பாளரை விடுத்து வேறொருவருக்குத் தங்கள் ஆதரவை அளிக்கலாம்.

குடியரசுக்கட்சியை பொறுத்தமட்டில் 2020ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர் தேர்தலில் 2443 வாக்குறுதியளித்த பேராளர்களும் (Pledged delegates) 107 வாக்குறுதியளியா பேராளர்களுமாக (Unpledged delegates) மொத்தம் 2550 பேராளர்கள் இருக்கிறார்கள். இதில் குறைந்தபட்சம் 1278 பேராளர்களை யார் பெறுகிறாரோ அவர் குடியரசுக்கட்சியின் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாள்ராவார். தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் 2550 பேராளர்களையும் பெற்று ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்வு பெற்றுவிட்டார்.

ஆரம்பத்தில் ட்ரம்பை விட மேலும் 12பேர் குடியரசுக் கட்சியின் வேட்புமனுவை வெல்ல சாத்தியம் (potential candidate) இருந்தது. அதன் பின்னர் 4பேர் 5 அல்லது 5இற்கு மேற்பட்ட குடியரசுக்கட்சியின் முதன்நிலை வாக்கெடுப்பில் போட்டியிட்டிருந்தனர். அவர்க்ள் அனைவரும் பின்னர் வாபஸ் பெற்றுவிட்டனர்.

குடியரசுக்கட்சியின் வேட்பாளர் தேர்வுமுறையில் சில மாநிலங்களில் வெற்றிபெறும் வேட்பாளர்களுக்கு அனைத்துப் பேராளர்களும் அளிக்கப்படுகின்றனர். இதை வெற்றிபெறுபவர் அனைத்தையும் அடைவர் (winner takes all) என்று சொல்லப்படுகிறது.

அந்த ஒரு சில மாகாணங்களிலும் சிலவற்றில் ஐம்பது விழுக்காடுக்கும் அதிகமாக வாக்குப் பெற்றிருந்தால் மட்டுமே அனைத்துப் பிரதிநிதிகளும் அளிக்கப்படுவர். இல்லாவிட்டால், அவரவர் பெறும் விழுக்காட்டுக்குத் தகுந்தவாறே வழங்கப்படும்.

அதிலும் குடியரசுக்கட்சி ஒரு முறையை வைத்திருக்கிறது. வாக்களித்தவர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் இருபது சதவிகித வாக்குகளை ஒரு வேட்பாளர் பெற்றிருந்தால்தான் வேட்பாளருக்கு பேராளர்கள் வழங்கப்படுவர். இல்லையேல் வழங்கப்படமாட்டாது.

### ஜனநாயக கட்சியின் (Democratic Party) பேராளர்கள் தேர்வுமுறை:

இக்கட்சியில் உறுதியளிக்கப்பட்ட பேராளர்கள் (pledge delegates), மேல்மட்ட பேராளர்கள் (super delegates) என்று இரு பிரிவினர் உள்ளனர். வாக்குறுதியளித்த (உறுதியளிக்கப்பட்ட) பேராளர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு கணக்கிடப்படுகிறது:

- மாவட்டப் பேராளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திலும் கடைசியில் நடந்த தேர்தலில் ஜனநாயகக்கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறே அமைகிறது. அந்தந்த மாவட்டத்தில் ஒரு வேட்பாளர் பெற்ற வாக்குகளுக்கேற்ப மாவட்டப் பேராளர்கள் வழங்கப்படுகிறார்கள்.
- மாநிலப் பேராளர்களை வேட்பாளர்கள் மாநில அளவில் தாங்கள் அடைந்த வாக்குகளுக்குத் தகுந்தவாறு பெறுகிறார்கள்.
- இதுபோக, உள்ளூர், மாவட்ட, மாநிலக் கட்சித்தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலக் கட்சிப் பேராளர்கள் வாக்குறுதியளித்த (உறுதியளிக்கப்பட்ட) பேராளர்களின் ஒரு பிரிவாக கட்சியால் நியமிக்கப்பட்டு, மாநில முதல்நிலை வாக்கெடுப்பு வாக்குகளின் விகிதப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- உறுதியளிக்கப்பட்ட பேராளர்களைப் பெற குறைந்தபட்சம் பதினைந்து சதவிகித வாக்குகளை ஒரு வேட்பாளர் அடைந்தாக வேண்டும்.

(தொடரும்...)



## அனைவரின் இயல்பு வாழ்க்கைக்காக பிரார்த்தனை செய்வோம்

தீபாவளி திருநாள் எங்கும் விமரிசையாக கொண்டாடும் ஓர் பண்டிகை ஆகும். ஒவ்வொரு இல்லத்திலும் இந்நாளில் புத்தாடை உடுத்து, ஆலயங்களுக்கு சென்று இறைவனை வழிபட்டு உறவினர் வீடுகளுக்கு பலகாரங்களை பகிர்ந்து உண்டு மகிழும் நாளாகும். ஆனால் இந்த வருடம் ஒட்டுமொத்த உலகமும் கொடிய நோய் தொற்றில் சிக்கி பல இன்னல்களை அனுபவித்து வருகின்றோம்.

வேலையில்லாத் திண்டாட்டம், வருமானம் இல்லை, நோய்ப்பதற்றம் ஆகியவற்றால் இந்த வருடம் முன்னெப்போதும் இல்லாத வகையில் பட்டாசு வெடிப்பதிலோ அல்லது பண்டிகையின்போது புதுத்துணி உடுத்தி மகிழ்வதையே தவிர்த்து இந்த வேளையில் நாம் இருப்பதனை கொண்டு வாழப்பழகுவோம். அத்தோடு இயன்ற வரை சுகாதாரத்துறைசார் நடைமுறைகளை கடைப்பிடிப்போம் மேலும் எம்மையும் நாட்டையும் பாதுகப்போம்.

வீட்டிலே இருந்து இறைவனை மெய்உருக கூட்டாக உலக நன்மைக்காக பிரார்த்தனை செய்யலாம். இது எவ்வளவு மேன்மையான எண்ணம். அதனைப்போல் மகிழ்வான இரவுப் பொழுதில் வீட்டில் மனம் விட்டு கதைபேசி வாய்விட்டுச் சிரித்துப்பாருங்கள். உங்கள் நோய்கூட விட்டு போகும்.

நிறைவாக புற இருளகல தீப ஒளி ஏற்றுகிறோம். அக இருளை போக்க நேரிய சிந்தனை, நற்செயல், இறைவழிபாடு இவை அனைத்தும் அக இருளை போக்கி உள்ளத்தை மலர்ச்சியாக்கும். எனவே அனைத்து உலக மக்களின் இயல்பு வாழ்வு சுபீட்சம் வேண்டி அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து நிறைவான நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

**சிவஸ்ரீ.கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள்,**
**தலைவர், இந்துக்குருமார் அமைப்பு**



## "இன்பங்கள் மலரட்டும்"

துன்பங்கள் தொலைந்து இன்பம் மலரும் திருநாள் தீபாவளி. இந்த பண்டிகையை மக்கள் அனைவரும் சந்தோசமாக கொண்டாடுவதற்கு காரணகர்த்தா நரகாசுரன். ஆதிசக்தி பீடத்தின் தலைவி காமாக்யாதேவியை அவன் வணங்கி வந்தான். காமாக்யாதேவிக்கு கோவில் கட்டினான். மகாவிஷ்ணுவின் கட்டளையால் காமாக்யாதேவி அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் பிரச்சினைகளோ, சண்டைகளோ வராமல் பாதுகாத்து வந்தார்.

மகாவிஷ்ணு தன் பேராற்றலை, தன் அருட்சக்தியை நரகாசுரனுக்கு வழங்கினார். பாணாசுரன் என்ற விஷஜந்து இவரோடு கூடியது. புத்தியை மாற்றியது. வசிஷ்டர் சாபம் வந்தது. மாகவிஷ்ணுவிற்கு கொடுத்த வாக்கை நரகாசுரன் மீறினான். மகாவிஷ்ணு மதியாலும், சக்தியபாமாவின் உதவியாலும் நரகாசுரனை வீழ்த்தினார். இன்று தீபாவளி. நடக்கும் நன்மைகளைக் கெடுப்பதற்கு என்றே தீய சக்திகள் உலகு எங்கும் உலாவுகின்றன.

அவற்றைக் கண்டு மயங்கி, புத்தி நிலையை தடுமாறவிட்டு, தன்னைத்தான் அழித்துக் கொள்கின்ற நிலைமை வந்து விடுகிறது. மகரிஷிகள், ஆத்ம ஞானிகள், வேதாந்திகள் எல்லாம் நடமாடும் தெய்வங்கள் ஆவார்கள். இவர்களை மதிக்க வேண்டும் என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். காமாக்யாதேவியின் செல்லப்பிள்ளையான நரகாசுரன்தான் அவருக்கு திருக்கோவிலைக் கட்டினான்.

காமாக்யாதேவி நரகாசுரனுக்கு கொஞ்சம் கருணை காட்டி இருக்கலாம். ஆகவே உயர்ந்தவர்கள், உத்தமர்களுக்கு தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும். அப்போது தான் தெய்வம் நம்மை காப்பாற்றும். ஆணவம், அகங்காரம் கூடாது என்ற பேருண்மையை இந்த தீபாவளி மூலம் நாம் கற்றுக்கொள்ளளாம். இந்த தீபாவளி அனைவரின் வாழ்விலும் ஒளி பெருக வேண்டும் என்று கூறி ஆசீர்வதிக்கின்றோம்.

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

**சிவஸ்ரீ. சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர்,**
**இந்துமத குரு பீடாதிபதி.**

## அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தீபாவளி பிரார்த்தனைச் செய்தி

இன்று உலகளாவிய ரீதியில் மக்கள் எதிர்கெண்டுள்ள கொரோனாத் தொற்று எனும் இருள் விரைவில் தீரவேண்டும் என்பதையே இன்றைய தீபாவளித் திருநாளில் நாம் முதன்மையானதாகப் பிரார்த்திக்க வேண்டும்.

இயற்கையின் விதிகளை மீறி நாம் நடக்கின்ற ஒவ்வொரு தடவையும் இயற்கை தனது பெருஞ்சக்தியினை எமக்கு நினைவுறுத்திக்கொண்டே இருக்கின்றது. அதன் ஒரு வடிவமே இன்று முழு உலகமும் எதிர்கொண்டுள்ள கொரோனா எனும் வைரஸ் தொற்று. மனிதன் தனது அறிவினை ஆக்க சக்திகளுக்கு மட்டும் பயன்படுத்தத் தவறும்போது இயற்கை மனிதனைத் தண்டிக்கத் தவறுவதில்லை என்பதை உணர மறந்து விடுகின்றோம்.

இறை சிந்தனையும், தர்மத்தின் வழியான வாழ்வும், தனிமனித ஒழுக்கமும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமான விழுமியப் பண்புகளாகும்.

மிகவும் விரைவில் இந்த தொற்றுநோய் அபாயம் நீங்கி உலக மக்கள் யாவரும் சுபிட்சமாக வாழ அருள்செய்ய வேண்டி எல்லாம்வல்ல பரம்பொருளைப் பணிந்து பிரார்த்திப்போம்.

**வே.கந்தசாமி**
**பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்.**



## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துச் செய்தி

இந்துக்களின் பாரம்பரிய பண்பாட்டு விழாக்களில் ஒன்றாகிய தீபாவளித் திருநாள் குறித்து அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதில் ஆனந்தமடைகிறேன். இருள் சூழ்ந்த நிலையில் தவித்த மக்களுக்கு விடிவு கிடைத்த நாள் தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் இறைவனால் அழிக்கப்பட்டு அறம் நிலை நாட்டப்பட்டு அனைவரும் தர்மத்தோடு வாழ வழி வகுத்த நாள் தீபாவளி. இல்லங்கள் தோறும் தீபம் ஏற்றி இறைவனைப் பிரார்த்தித்து இந்த இனிய நன்னாளை அமைதியாகக் கொண்டாடுவோமாக!

இன்று உலகம் முழுவதும் கொரோனா என்ற கொடிய நோயின் தாக்கத்தினால் மக்கள் அவலப்படுகிறார்கள். இந்நிலையில் நாம் ஆடம்பரங்களற்ற அமைதியான பிரார்த்தனை நாளாக இந்நாளை கருத வேண்டும்.

எனவே இயன்றவரை வீடுகளிலேயே தீபாவளி நாளில் தங்கியிருப்பது நல்லது. உற்றார், உறவினர்,நண்பர்களுக்கு தொலைபேசி ஊடாக வாழ்த்தைத் தெரிவித்து எம் அன்பைப் பெருக்குவோம். இறையருளால் உலகம் அமைதி பெற்று நாம் சுதந்திரமாக நடமாடும் நாள் விரைவில் வரவேண்டும் என்று அனைவரும் பிரார்த்திப்போமாக!

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**

## கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒரு நம்பிக்கையான ஒரு காலநிலையை கட்டி எழுப்புவோம்-வத்திக்கானில் இருந்து தீபாவளி செய்தி

அன்புள்ள இந்து நண்பர்களே!

திருத்தந்தையின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் அமைப்பானது இன்று கொண்டாடப்படும் தீபாவளி பெருவிழாவிற்கு தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறது. கொவிட்-19 தொற்றுநோயின் கஷ்டங்களுக்கு மத்தியில் இந்த அர்த்தமுள்ள கொண்டாட்டம் அனைத்து பயத்தின் மேகம் மற்றும் ஏக்கம், பதற்றம் என்பவற்றை அகற்றி உங்கள் மனதையும் இதயத்தையும் நட்பின் ஒளியாலும் ஒருமைப்பாட்டாலும் தாராள குணத்தாலும் நிரப்பட்டும்.

இந்த ஆண்டின் தீபாவளிச் செய்தியுடன் மதங்களுக்கிடையில் உரையாடலையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதற்குப் பொறுப்பான திருத்தந்தையின் சமயங்களுக்கிடையிலான உரையாடல் அமைப்பானது உங்களுக்கு வாழ்த்துக்களையும் காலத்திற்கேற்ற சில சிந்தனைகளையும் அனுப்பும் அன்பான பாரம்பரியத்தைத் தொடர்கிறது.

நம்முடைய அந்தந்த மத மரபுகள் துன்பங்களில் கூட நேர்மறையான மற்றும் நம்பிக்கையான அணுகுமுறையில் இருக்க கற்றுக் கொடுக்கின்றன. அந்த மத மரபுகள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் நம்முடைய பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் மனித குலத்தின் மேம்பாட்டிற்கான எங்கள் அர்ப்பணிப்பு கிறிஸ்தவர்களும் இந்துக்களும் நம் சமூகங்களின் இதயத்தில் நேர்மறை மற்றும் நம்பிக்கையின் கலாசாரத்தை கட்டியெழுப்ப நன் மனதுள்ள அனைத்து மக்களுடனும் இந்த கடினமான நாட்களில் மட்டுமல்ல வர இருக்கும் எதிர்காலத்திலும் ஒன்றுபடுவோம்.

**உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளி வாழ்த்துக்கள்.**

## தீபாவளி வாழ்த்துச் செய்தி

அறிவுபூர்வமாகவும், புத்திபூர்வமாகவும் ஆன்மீகச் செயற்பாடுகளை தம்மில் தாம் பேணுவதன் மூலமே கொரோனாத் தொற்றில் இருந்து உலகம் மீளமுடியும். இப் புனித குறிக்கோளை ஏற்று வாழ அந்தரங்க சுத்தியோடு தீபாவளி நன்னாளில் திடசங்கற்பம் பூணுவோமாக.

மனித குலம் தொலைநோக்கற்று வாழப்பழகியதால் இயற்கையோடு முரண்படுகிறது. இயற்கையே தெய்வம். இவ்வுண்மையை மறந்து இன்பம் எது? துன்பம் எது ? என்று தெரியாது தலைதடுமாறி வாழப்பழகிவிட்டோம். இத் துன்பச் சூழலிலும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி கொரோனாவை விரட்டியடிப்போம் எனும் மனோபாவம் நம்மைவிட்டு நீங்காதிருப்பது நமது தவக்குறையேயாகும்.

ஆலயங்களில் நடைபெறும் பூஜை வழிபாட்டுடன் யோகம்,தியானம் போன்றவற்றை ஒவ்வொரு தனிமனிதனும் பேணுவதன் மூலம் உடற்பலத்தையும் உளப்பலத்தையும் பெறுகிறான். இதுவே அனைவருக்கும் இன்று வேண்டியாதாகிறது. இது தவிர்ந்த ஆரவாரங்கள் இச் சூழலில் இருந்து நாம் மீள்வதற்கு வழியாகாது.

ஆதலால் நாமனைவரும் வீடுகளில் இருந்து தீபாவளி தினத்தில் கொடிய அசுரபலத்தோடு உலகை பீடித்திருக்கும் கொரோனாவை விரட்ட எல்லாம் வல்ல ஸ்ரீ சிவாகம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானை பிரார்த்திப்போமாக.

அனைவருக்கும் தீபாவளித் திருநாளில் புதிய உத்வேகமேற்பட எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஈசான.சி.சக்திகிரீவன்**
**தலைவர்,இந்து சமயப் பேரவை -யாழ்ப்பாணம்.**

# தீபாவளி சிறப்பு மலர்–2020


## நலம் தரும் சித்த ஆயுர்வேத சிகிச்சை

**யாழ்ப்பாண, இந்திய கேரள ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.**

சித்த ஆயுர்வேத சத்திர சிகிச்சைகளில்

1. முள்ளந்தண்டுப் பிரச்சினை (முள்ளந்தண்டு விலத்தல், தேய்வு, வெளித்தள்ளல்)
2. முறிவு நெறிவு
3. மாறாத புண்கள் (நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட புண்கள் சிறப்புச் சிகிச்சை)
4. நாளப்புடைப்புகள் (வரிக்கோஸ்)
5. மூட்டுக்களில் ஏற்படும் தேய்வு
6. குதமார்க்கத்தில் ஏற்படும் கட்டிகள், பிஸ்ரியுலா, நாடி புண்கள் (சைனஸ்)
7. மூலநோய்கள்
8. தோல்நோய்கள் ( மருத்துவ அட்டைவிடல் சிகிச்சை)
9. ஆணிக்கூடுகள் (அக்கினி கர்ம சிகிச்சை)
10. இதய அடைப்பு (இருதய நாடிகளில் ஏற்படும் படிவுகள்)
11. குதிக்கால் வாதம், மணிக்கட்டுகளில் ஏற்படும் விறைப்பு (அக்கினி கர்ம சிகிச்சை)
12. தோள் மூட்டுவலி
13. சிறுநீரகக் கற்கள்
14. வர்ம சிகிச்சை & காயகல்ப பயிற்சி

இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு



**Dr. G.Sritharan B. S.M.S. (SL) M.Phil (Jaf) PGD. in Ayurvedic surgery (Kelany) PHD (India)**
**Reg. No. 10093**



1. பாரிசவாதம்
2. வாதரோகங்கள்
3. சர்மரோகங்கள்
4. இருமல், முட்டு .சளி, வயிற்றுப்புண், சோரியாசிஸ், மலக்கட்டு, சிறுநீரக நோய்கள்
5. மானசீகரோகம்
6. மாதர்நோய்கள்
7. மாறாத தலைவலி
8. உடல்நிறை குறைத்தல்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr. (Mrs) S. Anpuchelvy B.S.M.S.S.L)M.D.(S) (India)**
**Reg. No.10434**

பொது மருத்துவ நிபுணர்



சித்த மருத்துவ நிபுணர்களினால் பாரிசவாதம், நரம்புத் தளர்ச்சி, பேச்சுக் குறைபாடு, கண்ணில் ஏற்படும் பாதிப்பு, காது கேட்பதில் உள்ள குறைபாடு, முள்ளந்தண்டுப் பிரச்சினை, இளமையில் ஏற்படும் முதுமை போன்றவற்றுக்கு பஞ்சகர்ம சிகிச்சையும் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, ஆஸ்துமா போன்றவற்றுக்கு Herbal Nebulaization & Nasal Therapy முகப்பரு, தலைமுடி உதிர்தல், வயிற்றுப்புண், நீரிழிவு, இருதயப் பாதிப்பு, வாதரோகங்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகிறது.

**வைரஸ் போன்ற நிலைகளில் ஏற்படும் சுவாசப் பாதை அழற்சிகளை தடுப்பதற்கான மூச்சுப் பயிற்சி (கபால, பஸ்தி) காயகல்பப் பயிற்சி, மூச்சுப் பாதைகளுக்கான மூலிகை, ஆவி பிடித்தல். (தற்காலம் குளிர்காலம் ஆகையால் வேலைக்குச் செல்பவர்கள் இச்சிகிச்சையினை மேற்கொள்வதால் கொரோனா பாதுகாப்பினை ஏற்படுத்த முடியும்) இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியினை பொதுமக்களுக்கு வழங்குகின்றோம்.**

**முக்கிய குறிப்பு: தொழில் நிமித்தம் செல்பவர்கள் காலையில் உங்கள் வேலைகளை இலகுவாக்க தொலைபேசியில் நேரத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்.**

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195. முற்பதிவு அவசியம்.

**Herbal Health Care Centre ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்**
65, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)



# Shivahami Mahal



# சிவகாமி மஹால்

Adiyapatham Road, Thirunelvely,
021 205 2288 / 077 932 6147
Sivakaamymahal@gmail.com
www.shivahamimahal.com



எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மிகச் சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்குபடுத்தல்கள், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ்.மண்ணில் ஆரம்பித்திருக்கின்றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக்கொள்ள எம்மை நாடுங்கள்!










## ‘அடக்கமாகக் கொண்டாடுவோம்’

ஆரவாரமில்லாது எதையுமே அடக்கமாகக் கொண்டாட
ஆண்டவனால் தரப்பட்ட அதிசயப் பண்டிகையே தீபாவளி!

நேரகாலம் தெரியாமல் நினைத்தபடி நடந்தோமே!
தீர இதை விரட்டலாம் தீபாவளியை வீட்டிலே கொண்டாடுவோம்!

கொரோனாவுக்கு நன்றி கூறி கொண்டாடுவோம் தனிமையில்
சராசரி மனிதராகி எங்கும் சமூக இடைவெளி பேணுவோம்!

கே.எஸ்.சிவஞானராஜா

## கண்ணன் அருள் பாட்டு

தீப ஒளி வீசுகின்ற திருநாள், தீமைகள் அழித்திட்ட தனிநாள்
பாவங்கள் ஓடுகின்ற ஒருநாள், பாடுவோம் ஆனந்தப் பெருநாள்
கீதை சொன்ன கண்ணன் தீய நரகாசுரனைக் கொன்று
பாதையிலே தூய ஒளி பாய்ச்சி பாவிகளை காத்திட்ட திருநாள்
பட்டாசு வெடிக்கப் புத்தாடை கட்டி பாடுவோம் ஆனந்தப்பாட்டு
பட்சணங்கள் வழங்கி விருந்துண்டு பாடுவோம் கண்ணன் அருள்பாட்டு

கரவைக்கூத்தன்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சுத்தம் சுகம் தரும்
மில்க்வைற் சோப் தூய்மை தரும்

987/1,(525/2) காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

TKT Mark நல்லெண்ணெய் No.1

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில்
மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...
தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

T.P: 0778328828, 0776528633, 0212255718



அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக!!

நடராசா கஜந்தன்

நியூ மைதிலி ஜுவலர்ஸ்

ஸ்தாபனத்தின் மற்று மொரு கிளை ஸ்தாபனமாக

நடராசா கஜந்தன்

சந்தோஷ் ஜுவலர்ஸ்




இல.97A, 99V. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கிக் கொண்டிருக் கின்றது என்பதனையும் வாடிக்கை யாளர்களுக்கு அறியத் தருகின்றோம்

காலத்தை வெல்லும் கலை
நுட்பத்துடன்மின்னும் பொன்நகையால்
மேலும் உங்கள் புன்னகை
ஒளிரும் விரையுங்கள்
நியூ மைதிலிக்கு



ஒரிஜினல் தங்க
நகைகளை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

இல.38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 221 7878 Fax : 021 221 7877

newmaithily40@gmail.com
newmaithily Jewellers
0094 21 221 7878

# தீபாவளி சிறப்பு மலர்-2020



## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–220

# உணவுக்கான உலகளவிலான ஒன்றிணைவு (Food Coalition)



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உலக உணவு மற்றும் விவசாய தாபனத்தின் தலைமையின் கீழாக இத்தாலி நாட்டினது பரிந்துரையில் உலக உணவு மற்றும் விவசாய தாபனத்தினால் உணவுக்கான ஒன்றிணைவு என்னும் கருப்பொருள் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தொற்று ஆரம்பித்து ஆறு மாதங்களுக்குள் கொரோனா வைரஸ் உலக நாடுகள் யாவற்றுக்கும் பரவிவிட்டிருக்கின்றது. பரவியது மட்டுமல்லாமல் அந்தந்த நாடுகளில் நீண்ட கால அதிகரித்த உணவுத் தேவையையும் உருவாக்கியிருக்கின்றது.

குறிப்பாக பல நாடுகளில் பட்டினியை உருவாக்கியும் இன்னும் பல நாடுகளில் பட்டினியால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களை துடிதுடிக்க வைத்திருக்கின்றது. இவ்வாறான நிலைமைகள் இப்படியொரு இடர்காலத்தில் தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும் அதனை நாம் முன்கூட்டியே எடுக்கின்ற முயற்சிகளின் காரணமாக நோய்த் தாக்கத்தின் வீரியத்தை நலிவடையச் செய்யலாம் என்பதனை நாம் எமக்குள்ளே ஏற்படுத்துகின்ற தேவை கருதிய மாற்றங்களினூடாக நடைமுறைப்படுத்த முடியும்.

2019 ஆம் ஆண்டில் 690 மில்லியன் மக்கள் தினமும் பட்டினியுடனேயே இரவு நித்திரைக்கு சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன என்றால் அதனுடன் சேர்த்து இன்னும் 83 தொடக்கம் 132 மில்லியன் மக்கள் மேலதிகமாக உண்ண உணவின்றியும் ஊட்டச்சத்து இன்றியும் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருப்பதாக அறிய முடிகின்றது.


இதுவொரு உலகளாவிய பிரச்சினையாக இருப்பதனால் உலக நாடுகளின் இணைவு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. உலக நாடுகளில் உணவிற்கான இணைவின் மூலமாக மக்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றும் அதேநேரத்தில் அவர்கள் கொரோனா போன்ற நோயின் தாக்கத்தினுள் இடர்படாது நோய்க்கெதிரான எதிர்ப்பு சக்தியைக் கொண்டு அதன் தாக்கத்திலிருந்து விடுபட்டு வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதற்காகவாகும்.

உணவுக்கான ஒன்றிணைவு என்பது உலக நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து உலக மக்களுக்கான உணவுற்பத்திக்கு அனைவரும் பங்குதாரர்களாக ஒரியக்கமாக இயங்குவதற்கான கூட்டணியாகும் (**Multi stakeholder Global alliance**).

இதன் மூலம் அனைவரையும் இணைக்கின்ற வலையமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக தற்போது பரவலடைந்து பல உயிர்களை உலகளவில் காவுகொண்டிருக்கும் கொரோனாவுக்கெதிரான இயக்கமாக இது உருவாகிக் கொண்டிருக்கின்றது.

எட்டயபுரத்திலிருந்து ஒலித்த அந்த ஒலி "தனிமனிதனுக்கு உணவில்லையென்றால் ஜெகத்தினையே அழித்திடுவோம்" என்னும் வீராவேசம் தற்போது உலக மக்கள் அனைவரையும் ஒரு குடையின் கீழ் இணைத்து அனைவருக்கும் உணவுற்பத்தி செய்வதற்கான செயன்முறையாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது என்பது எமக்கெல்லாம் உற்சாகம் தருகின்ற செய்தியாக இருக்கின்றது.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 303**




ஒருபக்கத்தில் இவ்வாறான இயக்கத்தின் உருவாக்கம் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் இன்னும் மிக வளர்ந்த நாடுகளில் சந்தை விலையை குறைந்து விடாது காப்பாற்றிக் கொள்வதற்காக முதலாளித்துவம் அதிகளவிலான உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு விடாது அவற்றை கடலில் கொட்டுவதும் அவற்றை அழிப்பதனையும் நாம் தினம் தினம் அறிகின்றோம்.

இப்படியானவற்றை நாம் கேட்கும் போது தினம் தினம் உணவுக்காக அலையும் மக்களும் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களைப் பார்க்கும் போது மனத்தில் ஒரு நெருடல் தோன்றுகின்றது. இவற்றுக்கு யார் பொறுப்புக்கூற முடியும்? ஆபிரிக்க தேசத்தைப்பற்றி தினம் தினம் வரும் செய்திகள் அங்குள்ளவர்கள் உணவுக்கு வழியின்றி நோய்வாய்ப்பட்டு எலும்பும் தோலுமாக அல்லலுறுவதை பார்க்கலாம்.

மழலைகள் சிறுவயதினர் எலும்பு முழுக்க தெரியுமளவுக்கு ஒட்டிப்போயிருக்கின்ற அவலத்திலும் அந்த உயிர்கள் வாழ்வதற்காக அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் நாம் தினம்தினம்எவ்வளவுஉணவை வீணடித்துக் கொண்டிருக்கின்றோம். மனிதநேயம் எங்கிருக்கின்றது என்பதற்கு உதாரணத்தை இவ்விடயத்தில் தேடிக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

விவசாய பெருமகன் ஒருவர் தனது வயலில் விளைந்த பயிர்களை முக்கியமாக உணவுப் பொருட்களை அவை பழுதடைந்து விடாமல் அவற்றை உணவற்றவர்களுக்கு வழங்கும் நோக்கில் தெருவில் அறிவிப்பையும் எழுதி வைத்து அந்த உணவுப்பொருட்களையும் காட்சிப்படுத்தியிருக்கின்றார்.

உண்ண உணவற்ற மக்கள் அவற்றை பெற்று தமது பசியைப் போக்கிக் கொள்ள முடியும். இவ்வாறு அனைவரும் செய்தால் நிச்சயமாக பட்டினியால் எவரும் இறக்க நேரிடாது.

மனிதம் காக்க மானுடம் உயர இத்தகைய பரோபகார கைங்கரியங்களில் வசதியுள்ளவர்கள், இன்னும் மனிதநேயமுள்ளவர்கள் ஈடுபடுவது அவசியமானதாகும்.

இந்த வாழ்க்கை ஒருதரம் தான் எமக்கு கிடைக்கும் என்பதனாலும் நாம் மற்றையவர்களுக்காக என்ன செய்தோம் என்பதனையும் ஒருகணம் சிந்தித்து பார்த்தால் இவை அனைத்துக்கும் எம்மிடையே விடை கிடைத்துவிடும்.

உணவினூடான ஒருங்கிணைப்பின் முக்கிய நோக்கமாக நிதி வளங்களைத் திரட்டுதல், புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் நோய் ஏற்படாமல் அனைவருக்கும் அவரவர் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமான முன்னேற்பாடான விடயங்கள் பற்றி அலசியாராய்தல் ஆகும்.

இதனை நாம் முழுவீச்சில் நடைமுறைப்படுத்தினால் எம்மாலும் இந்த இடர்காலத்தில் உணவுற்பத்தியினை செய்து மக்களைக் காப்பாற்ற முடியும்.

ஒவ்வொருவரும் தமக்கென இருக்கும் நிலப்பரப்பில் உணவுற்பத்தியை செய்வதை உறுதிப்படுத்தினால் அது அனைவரினாலும் மேற்கொள்ளப்பட்ட இயக்கமாக மாற்றமடையும்.

இவற்றையே பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் ஒன்றிலும் இரண்டிலும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளார்ந்து கொண்டிருகின்றது.

இந்த உணவுற்பத்தியானது பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் உணவுற்பத்தியுடன் அதற்கு வலுச்சேர்க்கின்றதனையும் தாண்டி நாம் சார்ந்த மக்களுடைய உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் அமையும்.

அத்துடன்பாரம்பரியஉணவு, உடை, குணம், வாழ்வியல் என்பனவற்றை மிகவும் துல்லியமாக அவதானித்து அவற்றை எமது விட்டுத் தோட்டம், பாடசாலைத் தோட்டம் ஆகியனவற்றுக்கூடாக மீளக்கட்டமைத்துக் கொள்ளலாம்.

இந்த உணவுக்கான ஒருங்கிணைப்பு அமைப்பின் செயல் வடிவங்களாக பௌதீக மற்றும் மனித வளங்களை முழுமையாக உள்வாங்கி அவற்றிலிருந்து திறமையானவர்களை உள்வாங்குவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு தற்போது அதற்கான மாற்று வழிகளைப் பற்றி அனைவருடனும் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

விரைந்து தொற்றானவர்களை பின்தொடர்தல், சுழற்சி முறையில் ஓரிடத்தில் பெறக்கூடியவாறு செயற்பாடுகளை வடிவமைத்தல், அவற்றை செயற்பட வைத்தல் என்பன இங்கே முக்கியமமானதாகும்.

இவற்றின் மூலம் ஒரு வலுவான வலைப்பின்னலை உருவாக்க முடியும் என்பது எமது ஐயப்பாடு ஆகும். அனைவரும் முயற்சி செய்வோம்.

விளைவை மற்றையவர்களுக்கும்தெரியப்படுத்துவோம்.

அனைவருக்கும்ஒரு பொதுவானஎதிரியாகஇந்தகொரோனா உருவாகி அதனை கட்டுப்படுத்துவதற்கான பிரயத்தனம் முழுவதுமாக ஒரே நேரத்தில் அனைவருக்குமான செயற்பாடாக அது விரிவடைவது அனைவருக்கும் நன்மைகளைத் தரும்.

# தோட்டத் தொழிலாளர்களை அரசு ஏமாற்றியுள்ளது- விஜித ஹேரத்



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் ஒரு வார்த்தையேனும் இல்லை. இதன்மூலம் அந்த மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2020 ஆம் வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமென அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது.

மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் கட்டாயம் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென உறுதி அளித்தனர். தற்போது நவம்பர் மாதமும் முடிவடையவுள்ளது. 2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு குறித்து ஒரு வார்த்தையேனும் இதில் இடம் பெறவில்லை.

இதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் தெளிவாக ஏமாற்றப்பட்டுள்ளனர். பிரதமரால் பாராளுமன்றில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி அவராலே மீறப்பட்டுள்ளது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவேனும் அது தொடர்பில் ஏதாவது பிரேரணைகளையாவது முன்வைக்க பிரதமர் முயற்சி எடுக்கவில்லை.

தேர்தலை மையப்படுத்தி தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றியுள்ளமையையே இவர்கள் செய்துள்ளனர். ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் தற்போது அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தயார் இல்லை என்பதே இவர்களின் செயற்பாடுகளில் இருந்து தெளிவாக விளங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பிரதேச ரீதியாக 10 பல்கலைக்கழகங்கள்

(கொழும்பு)

**அராங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக பிரதேச ரீதியாக 10 பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நேற்று முன்தினம் கல்வியமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனம் இல்லாத 10 மாவட்டங்களைத் தெரிவு செய்து அந்த மாவட்டங்களில் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கான யோசனை இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## உயிரிழந்த உடல்களின் தகனம் என்பது கலாசார தேர்வுகளை அடிப்படையாக கொண்டது

(கொழும்பு)

உயிரிழந்த உடல்களின் தகனம் என்பது அவரவர் கலாசார தேர்வுகளை அடிப்படையாக கொண்டவை என ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர், இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவித்தார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு, முஸ்லிம் சமூகம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கை நியாயமானது என்றதன் அடிப்படையில் பல சமூக அமைப்புக்களும் அவர்களுக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே, இவ்விடயம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு, ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியுமான ஹனா சிங்கர் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "தொற்று நோயால் இறந்தவர்கள் மூலம் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு, அந்த உடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்ற பொதுவான அனுமானம், ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்படவில்லை.

அதற்கு பதிலாக தகனம் என்பது அவரவர் கலாசார தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டவை' எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும் போது சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் மதிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அரசாங்கம் பின்பற்றவேண்டும் எனவும் அந்தச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மன்னரும் மக்களும்!

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் மேல் மக்களுக்கு மிகவும் மரியாதை. அவ்வளவு நன்றாக ஆட்சி புரிந்து கொண்டு வந்தார். அவருக்கு வயதாகிவிட்டது.அதனால் ஒரு நாள் அமைச்சரைக் கூப்பிட்டார்.

இதோ பாருங்கள்..எனக்கு வயதாகிவிட்டது. அதனால் இந்த அரச பொறுப்பை எல்லாம் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்...என்றார். அதற்குப் பின்பு ராணியைக் கூப்பிட்டார்.வா... நாம் இனிமேல் இங்கே இருக்க வேண்டாம். காட்டுக்குப் போய் தவம் செய்யலாம்..என்று கூப்பிட்டார்.இந்த செய்தி மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.மக்கள் உடனே கூட்டம் கூட்டமாக அரண்மனைக்கு வர ஆரம்பித்து விட்டார்கள். மன்னரைப் போய் பார்த்தார்கள்.

அரசே ..தாங்கள் எங்களுக்குத் தந்தை மாதிரி. நீங்கள் காட்டுக்குப் போய்விட்டால்..நாங்கள் எல்லாம் இங்கே எப்படி இருக்க முடியும்? எங்களுக்கெல்லாம் எந்தத் துன்பமும் இல்லாமல் பார்த்துக் கொண்டு வருகின்றீர்கள்...இது மாதிரியான ஒரு அரசாட்சி இல்லை என்றால் மக்கள் வாழ்ந்து என்ன பயன்? என்றார்கள். இருந்தாலும் என்ன செய்வது? வயதாகிவிட்ட காரணத்தினாலே தான் இந்த முடிவுக்கு வந்தேன்..என்றார்..ராஜா..

அப்படி என்றால் நீங்கள் காட்டுக்குப் போக வேண்டாம். நாங்கள்... போகின்றோம்...நாங்கள் அங்கே போய் தவம் செய்கிறோம்..வழிபாடு செய்கின்றோம்.ஆண்டவன் வருவார். அவரிடம் வரம் வாங்கிக் கொண்டு வந்துவிடுகின்றோம்..என்றார்கள்.அப்படி சொல்லிவிட்டு உடனே எல்லோரும் காட்டுக்குப் போனார்கள்.

நாட்டு மக்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாக வந்து காட்டிலே உட்கார்ந்து கொண்டு தவம் செய்வதைப் பார்த்தார்...கடவுள்..உடனே புறப்பட்டு வந்தார். எல்லோரும் இப்படி வந்து உட்கார்ந்திருக்கின்றீர்களே என்ன வேண்டும் உங்களுக்கு என்றார்.உடனே மக்கள் எல்லோரும் ஒரு குரலிலே சொன்னார்கள்.சுவாமி..எங்கள் அரசன் பல நாளைக்கு நல்லபடியாக இருக்க வேண்டும்.அவர் மகிழ்ச்சியாகவும் உடல்நலத்தோடும் இருந்தால் தான் நாங்கள் அமைதியாக வாழ முடியும்.. என்றார்கள்.சரி... அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்றார் ஆண்டவன்..எங்கள் மன்னருக்கு இன்னும் ஒரு நூறு வருடம் ஆயுளைக் கொடுங்கள்..என்றார்கள்.

அவ்வளவு தானே...சரி..அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டு ஆண்டவன் போய்விட்டார்.மக்கள் மகிழ்ச்சியோடு திரும்பி வந்தார்கள்.மன்னா கடவுள் வரம் கொடுத்துவிட்டார். நீங்கள் 100 வருடம் வாழப் போகின்றீர்கள்..என்றார்கள்.

இதைக் கேட்டதும் ராணி..ராஜாவை வணங்கி நான் தவம் செய்யப் போகின்றேன்..என்று புறப்பட்டார்கள். உடனே மக்கள் என்ன நினைத்ததார்கள் தெரியுமா?

ஐயோ..நாம் ராஜாவுக்கு மட்டும் தானே நீண்ட ஆயுள் வேண்டும் என்று வரம் வாங்கினோம் ராணிக்கு வாங்கவில்லையே...அது தான் கோபத்திலே புறப்பட்டார் போல இருக்கு என்று நினைத்து வருத்தப்பட்டார். ஆனால் ராணி நினைத்தது அது இல்லை. ராணி போய் தவம் செய்தார். கடவுள் காட்சி கொடுத்தார். இவர்கள் கேட்டார்.சுவாமி ராஜாவுக்கு மட்டும் 100 வருடம் ஆயுள் என்று வரம் கொடுத்தீர்கள். என்றார் குடி மக்களும் 100 வருடம் இருக்க வேண்டும்.இப்படிப்பட்ட குடி மக்கள் இல்லை என்றால் அப்படிப்பட்ட அரசன் இருந்து என்ன பிரயோசனம்? என்றார்.ஆண்டவன் பார்த்தார். சரி..அவர்களும் 100 வருடம் வாழ்வார்கள்.அது மட்டுமல்ல.. நீயும்..100 ஆண்டு காலம் வாழ வரமளிக்கின்றேன் என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்.இதிலே ஆண்டவன்..வருவதும் மறைவதும் முக்கியமில்லை.இதிலே கவனிக்க வேண்டியது ஆள்கின் றவனின் விசால மனம்..குடி மக்களின் விசால மனம்...ஆள்கிறவன் மனைவியின் விசால மனம்.

இப்படி ஒரு நாடு இருந்துவிட்டதென்றால் எப்படி இருக்கும் வாழ்க்கை..நினைத்துப் பாருங்கள்.:அதனால் தான் பெரியவர்கள் எல்லாம் சொல்கின்றார்கள்.இதய வாசல் திறந்தே இருக்க வேண்டும்..இதயத்தின் கதவுகளை மூடாதீர்கள்..என்று சொல்லுவார்கள்.. என்னிடம் ஒருத்தர் சொன்னார்.

என்னுடைய இதய வாசல் எப்பவும் திறந்தே தான் இருக்கு என்றார். எதனால் அப்படி சொல்கின்றீர்கள் என்று கேட்டேன்..டாக்டரே சொல்லிவிட்டார் என்னுடைய இதயத்திலே ஒரு ஓட்டை இருக்கு என்றும் வால்வு சரியில்லையாம் என்றார்.

# கால்வாயினுள் கவிழ்ந்த வாகனம் 22 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள கைபர் பக்துங்வா மாகாணம் தேரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்ற 22 பேர் கோர விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்கள்.

குறித்த விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,

திருமண நிகழ்வில் பங்கேற்று விட்டு வாகனமொன்றில் வீடுகளுக்கு திரும்பி கொண்டிருந்தனர்.

திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள கால்வாயில் கவிழ்ந்துள்ளது.

இதில் வானில் இருந்த அனைவரும் கால்வாய்க்குள் மூழ்கியுள்ளனர். உடனடியாக அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் 7 பேரை மட்டுமே உயிருடன் மீட்க முடிந்தது. 16 பெண்கள் மற்றும் ஆறு குழந்தைகள் உட்பட 22 பேர் சடலமாக மீட்கப்பட்டதாக உப பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

விபத்தில் சிக்கியவர்கள் அனைவரும் உறவுக்காரர்கள். அவர்களில் ஏழு பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து உடனடியாக தெரியவரவில்லை. இதுகுறித்து தீவிர விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)

# உணவை வீணடித்தால் கடும் தண்டனை

(பியாங்யாங்)




வடகொரியாவில் உணவை வீணடித்தால் கடும் தண்டனை வழங்கப்படும் என அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் எச்சரித்துள்ளார்.

வடகொரியாவில் ஓகஸ்ட் மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம்வரை தொடர்ச்சியாக 3 சூறாவளிகள் மற்றும் கொரோனா தாக்கம், பொருளாதாரத் தடை போன்ற காரணங்களால் அங்கு கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி மாளிகை விடுத்துள்ள அறிக்கையில்,

உணவை வீணடிப்பது பொருளாதாரத்தை வீணடிப்பதற்குச் சமம் என்றும், எந்த நிகழ்வில் எந்த வகையான உணவை உட்கொள்ள வேண்டும் என்றும் பட்டியலிட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# எஸ்-400 வான் ஏவுகணை தடுப்பு அமைப்பை இந்தியாவிடம் ஒப்படைக்கவுள்ள ரஷ்யா




(மொஸ்கோ)

எஸ்-400 ரக வான் ஏவுகணைத் தடுப்பு அமைப்பை திட்டமிட்ட காலத்திற்கு முன்னரே தயாரித்து இந்தியாவிடம் ஒப்படைக்க ரஷ்யா மீண்டும் உறுதியளித்துள்ளது.

ரஷ்யாவின் தளபாட உற்பத்தித் திட்ட அமைப்பின் துணை இயக்குநர் ரோமன் பாபுஸ்கின் (Roman Babushkin) மொஸ்கோவில் காணொளி தொடர்பாடல் மூலம் ஊடகங்களில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய மதிப்பில், சுமார் 38 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ரஷ்யாவிடமிருந்து எஸ்-400 ரக வான் ஏவுகணைத் தடுப்பு அமைப்பை வாங்கவுள்ளது.


இதற்கான ஒப்பந்தம் கடந்த 2018 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதுடன் இதற்கு அமெரிக்கா எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



**உள்நாட்டில் கட்டப்பட்ட இந்திய கடற்படைக்கான நீர்மூழ்கிக் கப்பலின் வெள்ளோட்டம் தொடங்கியுள்ளது. கடலுக்கு அடியிலும், கடலிலும் போரிடும் திறன் கொண்ட இந்தக் கப்பல் மணிக்கு 22 கிலோ மீற்றர் வேகத்தில் நீருக்குள் செல்லும் என்பதுடன் தொடர்ந்து 50 நாட்கள் நீரடியில் இருக்கும் திறனும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

# 21 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் போன அரிய வகை வைரக்கல்

(ஜெனிவா)



சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் அண்மையில் அரிய வகை பேர்பிள்-பிங்க் வைரக்கல் 21 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போனது.

கடந்த 2017 ஆம் ஆண்டு ரஷ்யாவின் வைர சுரங்கத்திலிருந்து பேர்பிள்-பிங்க் அரிய வைரக்கல் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த எடை 14.83 கரட். பார்க்க முட்டை வடிவில் இருக்கும் இந்த வைரக்கல்லை இயற்கையின் அதிசயம் என அழைக்கின்றனர். அரிதான பொருட்களை சேகரிக்கும் ஆர்வலர்கள் இந்த வைரக்கல் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் ஏலம் விடப்பட்டது.

16 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஆரம்பமான ஏலம் 21 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விலை போயுள்ளது. அத்தோடு ஏல கம்பனிக்கு சேர வேண்டிய கமிஷனையும் சேர்த்து 26.6 மில்லியனுக்கு வாங்கியுள்ளார் ஒருவர். அவரது வேண்டுகோளுக்கு ஏற்ப வைரக்கல்லை வாங்கியவரின் விபரத்தை வெளியிடாமல் உள்ளது ஏலம் விட்ட நிறுவனம் . எதிர்வரும் நாட்களில் இந்த வைரக்கல் அதிகளவில் விலை போகும். இதனை வாங்கியவர் அதிர்ஷ்ட் சாலி என தெரிவித்துள்ளார் ஐரோப்பாவின் மிகப்பெரிய ஜுவல்லரி அதிபர். (நி)

# பதவி விலகும் முன்னர் சீனாவுக்கான ட்ரம்பின் அடுத்த அடி

(வோஷிங்டன்)

சீன நிறுவனங்களில் அமெரிக்க முதலீடுகளை தடை செய்யும் ஒரு நிறை வேற்று ஆணையில் டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்கத் தேர்தலுக்குப் பின்னர் பீஜிங் மீதான அமெரிக்காவின் அழுத்தத்தை இந்த செயற்பாடானது அதிகரித்துள்ளது.

சீனாவின் தொலைத்தொடர்பு நிறுவனங்களான சீனா டெலிகாம் கோர்ப் லிமிடெட், சீனா மொபைல் லிமிடெட் மற்றும் கண்காணிப்பு உபகரணங்கள் தயாரிப்பாளரான ஹிக்விஷன் உள்ளிட்ட சீனாவின் மிகப்பெரிய நிறுவனங்களை இந்த நடவடிக்கை பாதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் சீன இராணுவத்தின் ஆதரவுடன் பாதுகாப்புத் துறையால் நியமிக்கப்பட்ட 31 சீன நிறுவனங்களின் பங்குகளை அமெரிக்க முதலீட்டு நிறுவனங்கள், ஓய்வூதிய நிதிகள் மற்றும் பிறவற்றைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் பதவியில் இருந்து விலகுவதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னர் அதாவது ஜனவரி 11 ஆம் திகதி முதல் அமெரிக்க முதலீட்டாளர்கள் தங்கள் பத்திரங்களில் எந்தவொரு பரிவர்த்தனையையும் இந்த உத்தரவு தடை செய்யும்.

சீனா பெரும்பான்மை ரீதியாக அமெரிக்காவின் மூலதனத்தை வளமாக பயன்படுத்திக் கொள்கிறது மற்றும் அதன் இராணுவம், உளவுத்துறை மற்றும் பிற பாதுகாப்பு எந்திரங்களின் வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கலை செயற்படுத்தவும் இவை உதவுகிறது என்று வெள்ளை மாளிகை சுட்டிக் காட்டியுள்ளது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த தடையுத்தரவானது உலகின் மிகப்பெரிய பொருளாதார பலம் கொண்ட இரு நாடுகளுக்கிடையில் ஏற்கனவே இருந்த உறவு விரிசலை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.


கொரோனா வைரஸ் தொற்று நோயை சீனா கையாளுதல் மற்றும் ஹொங்கொங்கில் பாதுகாப்பு சட்டத்தை சுமத்துவதற்கான சீனாவின் நடவடிக்கையினால் அண்மைக்காலமாக அமெரிக்கா சீனா மீது அழுத்தங்களை அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## இரண்டில் வந்தது குரு பகவான், இனிமேல் வெற்றிகள் வந்திணையும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



தனுசு இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று தனஸ்தானம் எனப்படும் 2 ஆம் இடத்திற்கு வருகின்றார். ஜென்மச் சனி மற்றும் ஜென்ம குருவின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த உங்களுக்கு அற்புதமான பெயர்ச்சியாக இந்தக் குருப்பெயர்ச்சி அமையப் போகின்றது. வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்தில் இப்பொழுது குரு பகவான் சஞ்சரிப்பதால், எதிர்பார்த்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.

குரு நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெற்றதால், மனக் குழப்பங்கள் அகலும். இடையில் மூன்றாம் இடத்திற்கும் குரு செல்கின்றார். வக்கிர இயக்கத்திலும் சில மாதங்கள் இருக்கின்றார். சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்கள் கவலைப்படத் தேவையில்லை. இருப்பினும் ஏழரைச் சனியால் இடர்பாடுகள் வரும்பொழுது, சனிக்கிழமையில் அனுமன் வழிபாடும், வியாழக் கிழமையில் குரு வழிபாடும் செய்வதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

### குருவின் பார்வை பலன்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் அந்த இடம் புனிதமடைகின்றது. எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றை குறிப்பது 6 ஆம் இடமாகும். எனவே அவை மூன்றின் தொல்லையும் உங்களுக்கு ஏற்படாது.

எதிரிகள் உதிரிகளாவர். உங்கள் மீது தொடுத்த வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொள்வர். பஞ்சாயத்துக்கள் சாதமாக முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இனிய மாற்றங்கள் வந்து சேரும். உயர் அதிகாரிகள் கேட்ட சலுகைகளைக் கொடுப்பர். உடல்நலம் பற்றிய பயம் அகலும்.

குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால், இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சி வெற்றி பெறும். இழந்த பதவிகளும், பொறுப்புகளும் கிடைக்கலாம். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வரலாம். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்பியவர்கள், மீண்டும் வெளிநாடு செல்ல எடுக்கும் முயற்சிகள் கைகூடலாம். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்லாமல் இருப்பது நல்லது.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் முத்தான தொழில் வாய்க்கும். முன்னேற்றம் அதிகரிக்கும். எதையும் துணிந்து செய்யும் ஆற்றல் அதிகரிக்கும். தொழில் பங்குதாரர்களை தேர்ந்தெடுத்து இணைத்துக்கொள்வீர்கள். அரசு வழி தொல்லைகள் மறைந்து போகலாம். ஆயினும் ஏழரைச் சனியில் இன்னும் பாதச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. உங்கள் எண்ணங்களுக்கு வலிமை அதிகம் என்பதால் நேர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 4.1.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். பிதுரார்ஜித ஸ்தானம் மற்றும் பாக்ய ஸ்தானம் என்று அழைக்கப்படும் இடத்திற்கு அதிபதியான சூரியன் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து நன்மைகளும் படிப்படியாக வந்துசேரும். அரசியலில் உள்ளவர்களுக்கு திடீரென அதிகாரப் பதவியும், பொறுப்புகளும் வரலாம்.

பிள்ளைகள் வழியில் விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். தந்தைவழி உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வெளிநாடு சம்பந்தப்பட்ட முயற்சிகளில் இருந்த தடைகள் அகலும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (5.1.2021 முதல் 1.3.2021 வரை)**

உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியானவர், சந்திரன். எனவே இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. 'நினைத்தது ஒன்றும், நடப்பது ஒன்றுமாக இருக்கின்றதே' என்று கவலைப்படுவீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சிறு அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் கூட உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. தொழிலில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. உங்கள் முன்னேற்றத்தை 'அல்லது முக்கியத் தகவல்களை உடனிருப்பவர்களிடம் கூட பகிர்ந்து கொள்ளக் கூடாது. வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். இந்தச் சோதனை காலத்தை சாதனைக் காலமாக மாற்ற, குலதெய்வம் மற்றும் இஷ்டதெய்வ வழிபாடுகளை




மேற்கொள்வது நல்லது.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2021 முதல் 4.4.2021 வரை மீண்டும் 14.9.2021 முதல் 13.11.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, சில நல்ல பலன்கள் நடைபெறும். 'குரு மங்கள யோகம்' செயற்படும் நேரமிது. இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடிவரும். உங்களுக்கோ, உங்கள் குழந்தைகளுக்கோ, பேரன் பேர்த்திகளுக்கோ, உடன்பிறப்புகளுக்கோ, காலாகாலத்தில் நடைபெற வேண்டிய கல்யாணங்கள் நல்லவிதமாக முடியும். சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

பிள்ளைகளின் மேற்படிப்பு, வெளிநாடு சென்று பணிபுரியும் வாய்ப்பு போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டு. வீடு கட்டுதல், கட்டிய வீட்டைப் பழுது பார்த்தல் போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள். பகையாக இருந்த நண்பர்கள் உறவாக மாறுவர். தங்க நகைகள் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உயரும்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம்(5.4.2021 முதல் 13.9.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு அனைத்து வழிகளிலும் நன்மைகளை வழங்குவார். தொட்டது துலங்கும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடிவரும். சுற்றமும், நட்பும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொள்வீர்கள். குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது. எனவே வரன்கள் வாசல் தேடி வரும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தி தரும். வருமானம் உயரும். வாகன யோகம் முதல் அனைத்து யோகங்களும் வந்துசேரும். தேக நலனில் மட்டும் அப்போதைக்கப்போது கொஞ்சம் கவனம் செலுத்துவது நல்லது. தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும்.

### குருவின் வக்கிர இயக்கம்

16.6.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். மகரம், கும்பம் இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையப் போகின்றது. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும் பொழுது யோகத்தை வழங்கும்.

எனவே வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி அகலும். வாய்ப்புகள் வாசல் தேடி வரும். வருமானம் உயரும்.

வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், மீண்டும் பணியில் சேர வாய்ப்பு கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமின்றி ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். பொதுவாழ்வில் புகழ் கூடும். நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் நேரமிது.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

இல்லத்துப் பூஜை அறையில் ராமர் பட்டாபிஷேகப் படம் வைத்து விஷ்ணு கவசம் பாடி திங்கட்கிழமை தோறும் வழிபாடு செய்வது நல்லது. வியாழக் கிழமைதோறும் விரதமிருந்து குரு கவசப் பாராயணம் செய்து தென்முகக் கடவுளை வழிபடுவதன் மூலம் நன்மைகள் பெறலாம்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

தனுசு .இராசியில் பிறந்த பெண்களுக்கு, தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் இனிமை தரும். ஏதேனும் ஒரு துறையில் சாதனை நிகழ்த்துவீர்கள். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். வாகனம் வாங்கி மகிழ்வீர்கள்.

பணி புரியும் பெண்களுக்கு திடீரென எதிர்பார்த்த முன்னேற்றமும், ஊதிய உயர்வும் கிடைக்கும். உடன்பிறப்புகளால் உதவி கிடைக்கும். குலதெய்வ வழிபாடும், திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# பதவியை காரணம் காட்டி சட்டத்தை மாற்ற முடியாது

(கொழும்பு)

இஸ்லாமிய மதத்தை சேர்ந்த அலி சப்ரி நீதி அமைச்சர் என்ற காரணத்தினால் நாட்டின் சட்டத்தை மாற்றிக்கொள்ள முடியாது என தேசப்பற்றுடைய பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

அலி சப்ரி நீதி அமைச்சராக நியமிக்கப்பட்ட போதிலும் சுகாதாரம் உள்ளிட்ட நாட்டின் சட்ட திட்டங்களில் மாற்றம் செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனாத் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை மண்ணில் புதைப்பதற்கு அனுமதிக்கப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை புதைப்பதற்கு அனுமதிக்கும் தீர்மானத்திற்கு தேசப்பற்றுடைய பிக்குகள் முன்னணி கடும் எதிர்ப்பை வெளியிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் சரியான தீர்மானம் எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வது இஸ்லாமிய மத நம்பிக்கை என்றாலும் கொரோனா போன்ற பயங்கரமான தொற்று நோய் நிலைமையின் போது முஸ்லிம் தலைவர்கள் சற்று நெகிழ்வுத் தன்மையுடன் இருக்க பழகிக் கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளார்.

நீர் ஊற்றுக்கள், கிணற்று நீர் போன்றவற்றை அதிகளவில் பயன்படுத்தும் இலங்கை போன்ற நாடுகளில் இவ்வாறான சடலங்களை அடக்கம் செய்வதனால் அந்த நீர் ஊடாக நோய்த் தொற்று பரவும் அபாயம் காணப்படுவதாக பெங்கமுவே நாலக தேரர், தெரிவித்துள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி

## பிரணவமாக இருக்கும் விநாயகர்

ஆலய வழிபாட்டின்போது நாம் ஒன்றை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

அதாவது ஆலய ஆகம விதிப்படி கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூலவருக்கும் எதிரில் உள்ள வாகனத்துக்கும் இடையில் விழுந்து வணங்குவதோ அல்லது அந்த இடத்தில் குறுக்கே செல்வதோ கூடாது. ஏனெனில் வாகனம் விடும் மூச்சுக்காற்றுத்தான் கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூலவருக்கு உயிர்நிலை தருவதாக நம்பப்படுகிறது.

வாகனம் வெளியிடும் மூச்சுக்காற்று தடைப்படக்கூடாது என்பதற்காகத்தான் நாம் மூலவருக்கும் வாகனத்துக்கும் குறுக்கே செல்லக்கூடாது என்கிறார்கள். இதை நினைவில் கொண்டபடி கன்னி மூலை விநாயகர் சந்நிதிக்கு செல்ல வேண்டும்.

இந்த உலகில் எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது ஓங்காரம். கன்னிமூல கணபதி ஓங்கார வடிவமாக உள்ளார். ஓங்காரத்தில் இருந்து தோன்றும் எதுவும் ஓங்காரத்திலேயே ஒடுங்கும். அதுபோலதான் ஓங்காரமான விநாயகருக்குள் எல்லாம் அடங்குகின்றது. எனவே ஆலய மண்டபத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் முன்பு பிரணவாகாரமான விநாயகரை வணங்கிவிட்டு செல்ல வேண்டும் என்பது சம்பிரதாயமாக உள்ளது.

"ஓம்" எனும் பிரணவ மந்திரத்தின் ஆரம்ப வடிவம்தான் பிள்ளையார் சுழி. "உ" என்ற பிள்ளையார் சுழியில் உள்ள வட்ட வடிவம் சிவசக்தியையும் கோடு சிவலிங்கத்தையும் குறிக்கிறது. எனவேதான் நாம் எதை எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழிபோட்டு தொடங்க வேண்டும் என்கிறார்கள்.

இத்தகைய சிறப்புடைய விநாயகர் முன்பு போய் நின்றதும் அவரைப் பார்த்தபடி தலையில் 5 முறை குட்டிக்கொள்ள வேண்டும். அதாவது வலது கையால் இடது பக்கத்திலும் இடது கையால் வலது பக்கத்திலும் நம் முன் மண்டையில் குட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

அதன்பிறகு தோப்புக்கரணம் போட்டபடி விநாயகர் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும். தோர்பி கரணம் என்பதுதான் தோப்புக்கரணமாக மாறியுள்ளது.

"தோர்பி" என்றால் "கைகளினால்" என்று பொருள். கரணம் என்றால் காது என்று அர்த்தம். கைகளினால் காதை பிடித்தபடி போடுவதே தோப்புக்கரணம்.

வலது கையால் இடது காதையும் இடது கையால் வலது காதையும் சற்று பிடித்து இழுத்தபடி தோப்புக்கரணம் போட வேண்டும். அப்போது இடது கால் மீது வலது காலை குறுக்காக வைத்திருக்க வேண்டும். இந்த நிலையில் தோப்புக்கரணம் போடும்போது கை முட்டுகள் பலமுறை தரையில் பட வேண்டும் என்பது நியதி. ஆனால் நிறையப் பேருக்கு குறுக்கு வளைவதில்லை. அப்படி இல்லாமல் உரிய நியதிப்படி விநாயகர் முன்பு தோப்புக்கரணம் போட வேண்டும்.

ஒரு பக்தன் தலையில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டு வழிபடும் போது விநாயகர் மகிழ்ச்சி அடைந்து பக்தன் கேட்கும் வரத்தை வழங்குகிறார் என்பார்கள். இதன் பின்னணியில் சில கதைகள் உள்ளன.

ஆனால் உண்மையில் அறிவியல் ரீதியிலான நன்மைகள் உள்ளன. விநாயகர் முன்பு நம் தலையில் குட்டிக்கொள்ளும் போது மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்கள் சுறுசுறுப்புப் பெறுகின்றன. இதனால் இரத்தம் சீராக மூளைக்குச் சென்று மூளை நல்ல வேகம் பெறும். நல்ல சிந்தனை வளரும். ஞாபக மறதி வராது.

அதுபோல காதுகளைப் பிடித்து இழுத்து, இழுத்து தோப்புக்கரணம் போடும் போது நம் உடம்பின் ஒட்டுமொத்த நரம்பு மண்டலம் வேகம் பெறும். இதனால் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி தட்டி எழுப்பபப்பட்டு அதனால் சூட்சும நாடி திறந்து கொள்ளும். அமிர்த கலசம் திறந்து உடல் முழுவதும் அமிர்தம் பரவும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## சட்டவிரோத மின்சாரம்; தாய் உயிரிழப்பு

(கொழும்பு)

அக்கரப்பத்தனை பகுதியில் மிருகங்களுக்காக பொருத்தப்பட்ட சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கிய நான்கு பிள்ளைகளின் தாய் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்ராசி நிவ் போட்மோர் பகுதியைச் சேர்ந்த காளி கிட்னம்மாள் (வயது-65) என்ற நான்கு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த தாய், பூஜைக்காக வாழையிலை வெட்டுவதற்காக குறித்த தோட்டத்திற்குச் சென்றுள்ளார். நீண்ட நேரம் வராதமையினால், வீட்டில் உள்ளவர்கள் தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது அவர், இறந்த நிலையில் கிடந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)

## கைதிகளின் எதிர்ப்பு நிறைவு

(கொழும்பு)

போகம்பறை சிறைச்சாலைக் கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

தமக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்துமாறு கோரியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சிறைக் கைதிகளை தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்காக குறித்த சிறைச்சாலை ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 800 இற்கும் அதிகமான கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதில் 30 கைதிகள் மற்றும் இரு அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


இவ்வாறான நிலையில் தங்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்து உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் இல்லாவிடின் வேறு இடத்திற்கு மாற்றுமாறும் கோரி கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 120 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 120 | 120 |
| தக்காளி | 80 | 80 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 90 | 60 |
| கோவா | 80 | 70 | 100 | 120 |
| கரட் | 120 | 200 | 190 | 200 |
| பூசணி | 60 | 60 | 50 | 80 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 220-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 240 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 260 | 130 | 250 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200. | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 160 | 180 | 200 |
| போஞ்சி | 180 | 180 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 160 | 80 | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65-75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 250 | -- | -- | -- |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | -- | 120 |




# குரங்கும் ஒற்றுமையற்ற பூனைகளும்



ஒருநாள் இரண்டு பூனைகள் சேர்ந்து ஒரு வீட்டில் ஒரு அப்பத்தை எடுத்தது.

அந்த அப்பத்தை இரண்டாகப் பிரிக்கும் போது ஒரு பூனை, அப்பம் சரி சமமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று மற்றப் பூனையுடன் சண்டையிட ஆரம்பித்தது.

பின்யாரிடமாவது சென்று அப்பத்தைப் பங்கிடுவோம் என்று தீர்மானித்தன.

அதனால் இரண்டு பூனைகளும், அப்பத்தைப் பங்கு பிரிப்பதற்காக ஒரு குரங்கிடம் சென்றன.

குரங்கும், அப்பத்தைச் சமமாகப் பிரிக்க ஒரு தராசில் அப்பத்தை இரண்டாக வெட்டி ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு துண்டை வைத்து நிறுத்துப் பார்த்தது.

தராசின் ஒரு தட்டு கீழே தாழ்ந்தது. அப்பொழுது குரங்கு, அந்தத் தட்டில் இருந்த அப்பத்துண்டை எடுத்து ஒரு கடி கடித்து விட்டு மீதியை தட்டில் போட்டது.

இப்பொழுது, மற்றத் தட்டுக் கீழே தாழ்ந்தது. அந்தத் தட்டிலிருந்த அப்பத்தையும் குரங்கு எடுத்துக் கடித்து விட்டு தட்டில் போட்டது. இப்படியே தட்டுகள் மாறி மாறித் தாழ்ந்தன. குரங்கும் மாறி மாறி அப்பத் துண்டுகளைக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தது.

அப்பம் குறைவதை பார்த்த பூனைகள், தங்கள் தவறை உணர்ந்து பங்கு பிரிக்க வேண்டாம். நாங்களே பார்த்துக் கொள்கி றோம் என்று மீதமுள்ள அப்பத்தைத் தரும்படி கேட்டன.

ஆனால் குரங்கு, மீதமுள்ள அப்பம், தான் இது வரை செய்த வேலைக்குக் கூலி, என்று சொல்லிவிட்டு அதையும் வாயில் போட்டுக் கொண்டது. ஒற்றுமையற்ற பூனைகள் ஏமாந்து கவலையுடன் திரும்பிச் சென்றன.

**நீதி : விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் பல நட்டங்களைத் தவிர்க்கலாம்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்




அரிஸ்ரோட்டில் தன்னிடம் படிக்கும் மாணவர்கள் சிறந்த குடிமகன்களாக வரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்கான பக்குவத்தை வளர்ப்பதில்தான் அவருடைய கவனம் இருந்தது.

ஆனால் அலெக்சாண்டருக்கு மட்டும் கூடுதலாக நிர்வாகம், ராஜதந்திரம், நீதியில் வழுவாமல் இருப்பது உள்ளிட்ட பாடங்கள்.

உண்மைக்கும் நீதிக்கும் கண்டிப்பாகத் தலை வணங்க வேண்டும். குறிப்பாக ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் அப்படியிருக்க வேண்டும் என்பதுதான் அரிஸ்ரோட்டில் அலெக்சாண்டருக்குச் சொல்லிக் கொடுத்த முக்கியமான பாலபாடம்.

பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கேள்வியின் நாயகனாகவே இருந்தான் அலெக்சாண்டர். வரலாறு, பூகோளம் போன்ற பாடங்களில் நிறையச் சந்தேகங்களைக் கேட்பான்.

குறிப்பாக கிரேக்கர்களின் வாழ்க்கை முறை, அவர்களுடைய பழக்கவழக்கங்கள், மத நம்பிக்கைகள், குண நலன்கள் பற்றிய அத்தனை விடயங்கள் குறித்தும் அவ்வப்போது எதையாவது கேட்டுக்கொண்டேயிருப்பான்.

எல்லாவற்றும் நிதானமாகப் பதிலளிப்பார் அரிஸ்ரோட்டில்.

ஒருநாள் அரிஸ்ரோட்டிலும் அலெக்சாண்டரும் அரண்மனை முற்றத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். தந்தை கடவுளுக்குப் பூஜை செய்கிறார். நானும் பூஜை செய்கிறேன். அப்படித்தான் எல்லோருமே பூஜை செய்வார்களா?

அரிஸ்ரோட்டிலிடம் அலெக்சாண்டர் விரும்பிக் கேட்ட கேள்வி இது. கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தயாராகிவிட்டான் அலெக்சாண்டர் என்பது புரிந்து விட்டது.

ஆமாம், அதில் என்ன சந்தேகம்?. இருக்கிறது. நம்முடைய அரண்மனையில் நிறையப் பூஜை சாமான்களை வைத்துப் பூஜை செய்கிறோம். அப்படித்தான் எல்லா வீடுகளிலும் பூஜை நடக்குமா?

பதில் சொல்லத் தயாரானார் அரிஸ்ரோட்டில். நம் அரண்மனையில் இருப்பதைப் போலவே ஒவ்வொரு கிரேக்கருடைய வீட்டிலும் பூஜை அறை தனியாக இருக்கும். அல்லது பூஜை செய்வதற்கென்று பிரத்தியேகமாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

அப்படி பூஜைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நெருப்புக் குண்டம் இருக்கும். அதில் அனுதினமும் நெருப்பு இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

(தொடரும்)

தர்மத்தாலும் கருணையாலும் பெறப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்கும். அதர்மத்தை தர்மத்தாலும் தீமையை நன்மையாலும்தான் வெல்ல முடியும். – பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தீபாவளித் திருநாளின் தத்துவத்தை உணர்வோம்

இன்று தீபாவளித் திருநாள். இந்துக்களின் பண்டிகைகளில் தீபாவளி மிகவும் முக்கியமானது.

அஞ்ஞானத்தை இருளாகவும் மெய்ஞானத்தை ஒளியாகவும் உணர்த்துவதே தீபாவளித் திருநாளின் தத்துவமாகும்.

நரகாசுரன் எனும் அசுரன் அகந்தை தலைக்கேறி நல்லவர்களுக்கெல்லாம் அக்கிரமம் செய்கிறான்.

இச்செயலால் ஸ்ரீமத் நாராயணன் கோபம் கொண்டு நரகாசுரனை வதம் செய்கிறார்.

நரகாசுரன் என்ற அசுரன் வதம் செய்யப்பட்டதனால், இன்புற்ற மக்கள் தங்கள் வாழ்வு ஒளிமயமாக அமைந்தது என்பதற்காக தீபங்களை ஏற்றி ஸ்ரீமத் நாராயணனை வழிபாடு செய்தனர். அத் திருநாளே தீபாவளியாகும்.

ஆக, அகந்தை கொள்வோர் அழிவது திண்ணம் என்ற உண்மை இதனூடு உணர்த்தப்படுகிறது.

இதனாலோ என்னவோ நம் தமிழ் மொழியில் அறுகின்ற நாளைக்கு எழுவது அகந்தை என்ற பழமொழி உட்புகுந்து கொண்டது. இவை தீபாவளி பற்றிய ஒரு சிறு குறிப்பு மட்டுமே.

இங்கு தீபாவளித் திருநாளை காலந்தோறும் கொண்டாடுவதற்குள் இருக்கக் கூடிய மெய்ப்பொருள் என்ன என்பதை அறிந்து கொள்வதுதான் முக்கியமானதாகும்.

நரகாசுரன் என்ற அசுரன் அகந்தை கொண்டு நல்லவர்களுக்குத் துன்பம் விளைவித்தான்.

அவனின் கொடுமை தாங்க முடியாத மக்கள் வருந்தினர். கண்ணீர் விட்டு அழுதனர். இறைவனிடம் முறையிட்டனர்.

இதனைப் பார்த்த நாராயணன் தானே வெளிப்பட்டு நரகாசுரனை வதம் செய்தார்.

ஆக, நல்லவர்களை வருத்துபவர்கள் இறைவனால் தண்டிக்கப்படுவர் என்பது இங்கு வெளிப்படும் உண்மை.

இதற்கு மேலாக அகந்தை கொண்டால் அது அழிவைத் தரும் என்பதை இந்த வையத்தார் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

அதாவது அழிவில் இருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதாக இருந்தால், அகந்தையை துறந்து அதர்மத்தை எதிர்த்து தர்மத்தின் வழியில் வாழுதல் அவசியம்.

அதுவே வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறையாகும்.

எனினும் நரகாசுரர்கள் இன்னமும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். அதனால் நல்லவர்கள் துன்பத்தினின்றும் மீள முடியாதவர்களாக உள்ளனர்.

இங்கு நரகாசுரர்கள் என்போர் இருள் சூழ்ந்த மனத்தினர். இத்தகையவர்கள் மற்றவர்களை வஞ்சிப்பதிலும் பிறருக்குக் கெடுதி செய்வதிலும் மக்கள் சமூகத்தை எதிர்ப்பதிலுமே தங்களின் காலத்தை செலவிடுவர்.

இதனால் அவர்கள் மெய்ஞானத்தை உணர முடியாதவர்களாக இருள்சூழ் உலகத்தையே நிஜம் என நம்புகின்றனர்.

எனவே இத்தகையவர்கள் மெய்ஞானத்தை தேடிப் பெறுதல் வேண்டும். மெய்ஞானம் கிடைத்தால் அது ஒளிமயமானதாகும்.

இதனையே தீபாவளித் திருநாள் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

# சட்டவிரோதக் கட்டடங்களுக்கு இரண்டு வாரம் கால அவகாசம்

## சாவகச்சேரி பிரதேச சபை அதிரடி முடிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி இன்றி சபை எல்லைக்குள் கட்டப்பட்டிருக்கும் சட்ட விரோதக் கட்டடங்கள் தொடர்பில் சாவகச்சேரி பிர தேச சபை அதிரடி முடிவெடுக்க விருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர் பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேச சபை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மக்களுக்கு ஒரு தெளிவு படுத்தலை ஏற்படுத்த விரும்புகிறோம். அனு மதியற்ற சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பில் மக்களும் பிரதேசசபையும் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றன.

சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பில் இது வரை ஒரு மென்போக்கினை கடைப்பிடித்து வந்தோம். தொடர்ச்சியாக அவ்வாறான விட்டுக் கொடுப்புக்களை செய்ய முடியாத சூழலில் உள்ளோம். சட்டவி ரோ தக் கட்டடங்கள் தொடர் பில் சில அதிரடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது. அந்தவகையில் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்ச சூழலில் பிறப்பிக்கப் பட்ட ஊரடங்கு வேளையில் எந்தவிதமான அனுமதியும் இன்றி கட்டப்பட்ட கட்டடங்கள் யாவும் எமது சபையால் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன.

அந்தவகையில் முதற்கட்டமாக நாவற்குழி, கைதடிப் பகுதிகளில் இந்த அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

எந்தவிதமான அனுமதியுமின்றி எமது சபை எல்லைக்குள் கட்டடம் அமைத்தவர்கள் இரண்டு வார காலப்பகுதிக்குள் பிரதேசசபையில் முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ள கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு வார காலத்திற்குள் உரிய அனுமதிகளைப் பெற்று பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும். தவறும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதனைத் தவிர்க்க முடியாது என அவர் தெரிவித்தார். (5-30)

# இருட்டு வழியில் தீபமிருந்தால் அதுவே வழிக்கு துணையாகும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

(கொழும்பு)

இருட்டு வழியிற் தீபம் இருந்தால் அதுவே வழிக்குத் துணையாக அமையும். மனித வாழ்க்கைப் பாதைக்கு அருட்தீபம் துணை நின்றால் வாழ்வு சுபீட்சமாகும் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். இருளை அகற்றி ஒளி ஏற்றும் இந்து மக்களின் உயர்ந்த சமயப் பண்டிகைத் தினமான தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்தார். வாழ்த்துச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

அத்தகைய அருட் தீபமாகிய ஆன்மீக ஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறும் சிறப்பு வாய்ந்த நன்னாளே தீபாவளித் திருநாள். தேசிய ஒற்றுமைக்கு இது ஒரு சிறந்த நாளாகும். எல்லா மதங்களிலும் விளக்கு ஏற்றுவதன் காரணம் இருளையும் அறியாமையையும் அகற்றி ஒளியை பரப்புவதற்கே.

தீபாவளியும் அதன் எதிர்பார்ப்புகள் நிறைந்த தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியிற் சிறந்த புரிந்துணர்வுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த எல்லா வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம். இந்த ஒளியை நாம் அணைய விடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கைவாழ் இந்து மக்கள் அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துக்கள் என அவர்மேலும் தெரிவித்தார். (ஐ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 15 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** வில்லூன்றி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், துரையப்பா விளையாட்டரங்கு, பொலிஸ்நிலையம், சிறைச்சாலை, வட மாகாண சுகாதார திணைக்களம், மணற்காடு, அம்பன், குடத்தனை, பொற்பதி, அம்பன் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மடுகந்தவிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய
பழமரங்களைக் கேட்டுப்பார்,
உனதுபரம்பரையின் கனவுகளை
இன்னமும் அதுவைத்திருக்கக்கூடும்."

கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## புன்னகையுடன் திகழுங்கள்

❖ உனக்குள் இருக்கும் தெய்வத் தன்மையை வெளியே காட்ட வேண்டும். அவ்வாறு செய்தால், உன்னைச் சுற்றியுள்ள எல்லாம் இசைவாக ஒழுங்கு படுத்தப்படும்.

❖ நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும்உன்னிடம் இருக்கும் வரை அனைத்தும் முன்னேற்றமடையும்.

❖ மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரினையும் வழிபடுங்கள்.

❖ ஆசைக்கும் கோபத்திற்கும் அடிமையாய் இருந்தால், உண்மையான சுதந்திரத்தின் இன்பத்தை ஒருவனால் உய்த்துணர முடியாது.

❖ எப்போதும் இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டுசெல்லும்.

❖ சுயநலமே ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.

❖ உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள், நமக்குத் தேவை, இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும் தாம். காலமெல்லாம் அழுது கொண்டிருந்தது போதும், இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

# றிசாத் பதியுதீனுக்கு விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனின் பிணை மனு கோரிக்கை நிராகரிக்கப் பட்டுள்ளதாக கொழும்பு கோட்டை நீதவான் தெரிவித்துள்ளார்.

மேலும், அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீத வான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி, குற்றப்புலனாய்வு பிரி வினரால் றிசாத் பதியுதீன் கைது செய்யப்பட்டு, கோட்டை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முன் னிலைப்படுத்திய போதே விள க்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, றிசாத் பதியுதீன் பிணை கோரி நீதி மன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

குறித்த மனுவை நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு உட்படுத்துவதாக நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்நிலையிலேயே றிசாத் பதியுதீனின் விவகாரத்தை விசாரணைக்கு உட்படுத்திய நீதி மன்றம், மனு கோரிக்கையை நிராகரித்ததுடன், எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்கு மாறும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினத்தில் புத்தளம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களை, அரச பேருந்துகள் ஊடாக மன்னார் பகுதிக்கு அழைத்துச் சென்று வாக்களிக்க வைத்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனா சமூகப் பரவலாகவில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று சமூகமயமாக்கப்பட வில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"கொரோனா வைரஸ்தொற்று இன்னும் மூன்றாம் கட்டத்திலேயே உள்ளது. ஆகையினால் அதனைக் கட்டுப்படுத்துவது கடினம் அல்ல. மேலும், உலக சுகாதார அமைப்பு மற்றும் தொற்று நோயியல் பிரிவு ஆகியன வைரஸ்சமூகமயமாக்கப்பட வில்லை என்றே கூறுகின்றன.

அந்தவகையில், மினுவாங்கொட மற்றும்பேலியகொட கொத்தணியில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் மாத்திரமே கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த கொத்தணியில் முதலாவது கட்டத்தில் உள்ளவர்கள்



அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்" என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# ஊரடங்கு நீக்கம் இன்று தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவினை நீக்குவது தொடர்பான தீர்மானம் இன்று எடுக்கப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எவ்வாறெனினும் ஊரடங்கு உத்தரவினை மீண்டும் அமுல் படுத்துவது தொடர்பான தீர்மானம் இதுவரை எடுக்கப்பட வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# அரசை விமர்சிப்பதாக எண்ணி நாட்டை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டாம்


## தவறுகள் இருப்பின் சுட்டிக்காட்டுங்கள்

(கொழும்பு)

நாட்டில் கொவிட் -19 வைரஸ் பரவல் நிலைமைகளில் இருந்து மக்களை மீட்க தெற்கிற்கு எவ்வாறு நிவாரண வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றதோ அதேயளவு நிவாரணங்கள் வடக்கிற்கும் கிழக்கிற்கும் கொடுக்கப்படுவதாக ஆளும் கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா சபையில் தெரிவித்தார்.,

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 2020 ஆம் ஆண்டிற்கான நிதி யொதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து



வருகின்றது.

இதில் பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் தெற்கிற்கு கொடுக்கும் முன்னுரிமை வடக்கு- கிழக்கு பிரதேசங்களுக்கும் கொடுக்கப்படுகின்றது.

இதனை தமிழ் தரப்புகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கிற்கு அபிவிருத்திகள் செய்யப்படுகின்றன, வைத்தியசாலைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்திகள் அவர்களின் கண்களுக்கு தெரிகின்றது.

அதேபோல் கொரோனாவிற்கு மதம், இனம் எதுவும் தெரியாது. எமக்கு வாக்களித்த வர்களும், எதிர்க்கட்சிக்கு வாக்களித்தவர்களும் என சகலருக்கும் கொரோனா வைரஸ் பரவுகின்றது. எனவே சகல மக்களையும் இந்த வைரஸ் தாக்கத்தில் இருந்து மீட்க சகலரும் இணைந்து கடமையாற்றுவோம். எங்காவது எம்மால் தவறுகள் விடப்பட்டால் அதனை சுட்டிக்காட்டுங்கள், நாம் அதனை திருத்திக்கொள்கிறோம். ஆனால் அரசாங்கத்தை விமர்சிப்பதாக நினைத்து நாட்டினை நெருக்கடியில் தள்ளிவிட வேண்டாம் என தெரிவித்தார். (நி-4)

# நாடு முழுவதும் கைத்தொழிற் பேட்டைகள்

## ஆரம்பிக்கப்படும் என்கின்றார் விமல்

(கொழும்பு)

**எதிர்வரும் 5 வருட காலத்தினுள் நாடுபூராகவும் 15 கைத் தொழில் பேட்டைகளை ஆரம்பிக்க இருப்பதாகவும் இதற்கு வரவு- செலவுத்திட்டத்தினூடாக நிதி ஒதுக்கு உள்ளதாகவும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய திட்டத்தின் கீழ் பொலநறுவை மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலநறுவை கைத்தொழில் பேட்டையினூடாக கைத்தொழிற் துறையினருக்கு பல்வேறு சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு தொழிலற்றவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நாடு முழுவதும் கைத்தொழிற்பேட்டைகளை அமைத்து தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி கைத்தொழில்களை ஊக்குவிக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற அரசாங்கத்தின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சிறந்ததாக இல்லை என பெரும்பாலான கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன.

மேலும், சமூகத்திலுள்ள பெரும் பாலானோருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வருகின்ற நிலையில் சுகாதார அமைச்சு சமூகத் தொற்று இல்லை எனக் கூறி, உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள தவறியுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தாமல், மக்களின் துன்பங்களுக்கு முக்கிய காரணமாக அமைந்த, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமெனவும் ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. (ஜ-4)

## செல்வச்சந்நிதி...

இதற்கமைய நேற்றிலிருந்து 14 நாட்களுக்கு குறித்த ஆச்சிரமம் முடக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,60)

## அரச காணியை...

ணப்பதாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரச தொழில் முயற்சி காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி ராஜாங்க அமைச்சினால் இளந்தொழில் முயற்சியாளருக்கு ஒரு இலட்சம் ஏக்கர் காணித் துண்டுகளை வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

அதற்கமைவாக பலரும் தொடர்ச்சியாக விண்ணப்பித்து வருகின்றனர்.

அரச காணிக்கு விண்ணப்பிக்கும் கால எல்லையை எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை விண்ணப்பிக்காதோர் மேற்படி சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## அரைச்சதத்தை...

இதன்மூலம் நாட்டில் கோவிட்-19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 53ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு - 14ஐச் சேர்ந்த 83 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்துள்ளார். உயர் குருதி அழுத்தம், நீரிழிவு மற்றும் கோவிட் -19 ஆகியன அவருடைய உயிரிழப்புக்கு காரணம் என உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலாபத்தைச் சேர்ந்த 68 வயதுடைய ஆண் ஒருவர் கோவிட் - 19 நோய்க்காக முல்லேரியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். அவருக்கு உயர் குருதி அழுத்தம், மூளையில் குருதிக் கசிவு என்பன காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 5 வாரத்தில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## பொருளாதார...

வந்திருந்த நிலையில் விவாதத்தில் உரையாற்றியபோதே சுகாதார அமைச்சர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

கோவிட் - 19 வைரஸ் பரவல் சமூக பரவலாக காணப்படவில்லை. வைரஸ் பரவலை கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளோம்.

நேற்று நாட்டில் பரவலாக வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை. பேலியகொட கொத்தணியில் இருந்தே நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர்.

எனவே வைரஸ் சமூக பரவலாக மாறும் நிலைமையை நாம் கட்டுப்படுத்தியுள்ளோம். இதில் சகலரும் ஒன்றிணைந்து நாடாக மீள்வோம், இதற்கு சகலரதும் ஒத்துழைப்புகள் அவசியம் என்றார். (ம-3)

## சிறைச்சாலை...

குருவிட்ட மற்றும் பூஸா சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

அதற்கமைய கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையில் இதுவரை 115 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பெண் கைதிகள் 92 பேருக்கும் ஆண் கைதிகள் 20 பேருக்கும் சிறைச்சாலை அலுவலர்கள் 3 பேருக்கும் வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, போகம்பர சிறைச்சாலை, மாத்தறை சிறைச்சாலை, குருவிட்ட சிறைச்சாலை மற்றும் பூஸா சிறைச்சாலை ஆகியவற்றில் இதுவரை 46 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து சிறைக் கொத்தணிகளில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 161 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 94 பெண் கைதிகளும், 64 ஆண் கைதிகளும் மற்றும் சிறைச்சாலை அலுவலர்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர். (ம-3)

## 16 ஆயிரத்தை...

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16. ஆயிரத்து 191ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## உடல்களை...

தெரிவித்துள்ளார்.

இந்த நிபுணர்கள் குழுவில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள், சட்ட வைத்திய நிபுணர்கள், பல்வேறு விசேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

உலக பரிசோதனை ஆய்வுகளுக்கு அமைய கொரோனாவின் புதிய நிலைமை தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு பின்னர் மீளாய்வு செய்யப்படும் என்றார். (ம-3)

## தனிமைப்படு...

றும் விமானப் படையினர் இணைந்து முகத்துவாரம் பிரதேசத்தில் மேற்கொண்ட

### கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள்

# வீதிகளில் விழுந்து உயிரிழப்பு என்று வெளியான செய்தி தவறானது

## புகைப்படம் வெளியிட்டவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளாகி மக்கள் தெருவில் விழுந்து இறந்து கொண்டிருப்பதாக வெளியாகும் செய்திகளில் எந்தவொரு உண்மையும் இல்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் வீதிகளில் விழுந்து இறப்பதாக தவறான புகைப்படங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றது.

குறித்த புகைப்படங்களை வெளியிட்டோர் தொடர்பில் பொலிஸார் சிறப்பு விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளான எவரும் வீதியில் விழுந்து இறக்கவில்லை.

வீதியில் இறந்துகிடந்த பிச்சைக்காரரை தவிர கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் எவரும் அவ்வாறு உயிரிழக்கவில்லை என பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார். (ம-3)

# ட்ரம்புக்கு ஏற்பட்ட நிலையே கோட்டாவுக்கும் ஏற்படும்

## எதிர்க்கட்சி எம்.பி எச்சரிக்கை

(கொழும்பு)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இரண்டாவது தடவை ஆட்சியைக் கைப்பற்ற முடியாமல் போகும் நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மகிந்தவின் புதிய கட்சியானது சுதந்திரக் கட்சிக்கு மட்டுமல்லாது முழு அரசியலுக்கும் சேதம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்து 100 நாட்களில் செய்த தவறைக் கூட இந்த அரசாங்கம் இதுவரையில் செய்யவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், தற்போது பாரிய சுகாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் டொனால்ட் ட்ரம்புக்கு ஏற்பட்ட நிலைமையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

(தனிமைப்படு... தொடர்ச்சி)

நடவடிக்கையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் பிரதேசங்களில் பயணக் கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)


மெகா பவர்
திகதி 13/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0672
O 25 55 57 63 72

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2600
வெற்றி இலக்கங்கள்
E 08 23 65 67
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/11/13
சீட்டிழுப்பு இலக்கம் 4305
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Q 8 3 2 1 5 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2020.11.13
சீட்டிழுப்பு இலக்கம் -343
D 13 22 24 32
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1275
நிறம் இளம்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 13.11.2020
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
A 01 37 73 77
SUPER 500 9 3 3 9

ராசி
சுப்பர் ஜக்பொட் 52,52,097/=
திகதி : 13.11.2020
வெற்றி வாரம் : 2982
வர்ணம் : கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள்
02 37 39 61
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,528,117

ஜய
E 03 12 34 39
650
மஞ்சள்
13.11 2020
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,867,930
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1101
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.11.13
அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 83,718,220/-
வெற்றி இலக்கங்கள்
12 39 44 55 F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2020.11.13
சீட்டிழுப்பு இல. : 3431
வர்ணம் : ஆரஞ்சு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,006,495.40
வெற்றி இலக்கங்கள்
06 33 39 66 D
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 8048
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# வடக்கில் கடலட்டை பிடிக்க நிபந்தனையுடன் அனுமதி

## அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு கடல் பிரதேசத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு வடக்கு மாகாணத்தினை சேர்ந்த கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் குறித்த அனுமதியானது ஸ்கின் டைவிங் எனப்படும் சாதாரண சுழியோடி முறையின் ஊடாக மாத்திரமே மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் ஸ்கியூபா எனப்படும் சிலிண்டர் பயன்படுத்தி கடலட்டை பிடிக்க அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதிகள் வழங்கப்படவிருந்தன. எனினும்கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளில் ஒன்றாக வடக்கு கடலில் கடலட்டை பிடிப்பது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையின் அடிப்படையில் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு முழு நாட்டையும் முடக்காமல் அடையாளப்படுத்தப்படுகின்ற பிரதேசங்களை மாத்திரம் தனிமைப்படுத்துவதன் ஊடாக கட்டுப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் தற்போதைய தீர்மானத்திற்கு அமைவாக, கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை நிபந்தனையுடன் வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் மாவட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், வடக்கு கடல் பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் பயன்படுத்தப்படுவதாக தனக்கு தகவல்கள் கிடைப்பதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை பயன்படுத்துகின்றவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் தொடர்பான இருநாடுகளுக்கும் இடையிலான அமைச்சுமட்டக் கலந்துரையாடல் விரைவில் நடைபெறவுள்ளதனால், எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் தொடர்பான பதிவுகளை தனக்கு சமர்ப்பிக்குமாறும் தெரிவித்திருந்தார். (ம-03)

# தலைவலிக்கு மருந்தெடுக்கச் சென்ற யுவதிக்கு கொரோனா

(கொழும்பு)

தங்காலை குடாவெல்ல பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய இளம் யுவதி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

அவர் இதற்கு முன்னர் குடாவெல்ல பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியுடன் நெருங்கிசெயற்பட்டவர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 9ஆம் திகதி தலைவலி ஏற்பட்டு சிகிச்சை பெறுவதற்காக தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த பரிசோதனையின் போது அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை உறுதியாகியுள்ளது.

அதற்கமைய அவர் கம்புருகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளநிலையில் அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-03)

## களுத்துறைச் சிறைச்சாலையிலும்

# கைதிகள் கூரை மீது ஏறிப் போராட்டம்

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 20 கைதிகள் சிறைக் கூரை மீது ஏறி நின்று போராட்டம் செய்து வருகின்றனர்.

நேற்று மாலை முதல் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தங்களது வழக்கு விசாரணைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பகுப்பாய்வு அறிக்கைகளை விரைந்து சமர்ப்பிக்கும்படி வலியுறுத்தியே இவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்திருக்கின்றனர் என்று களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-03)

# பாடசாலை சிறார்களுக்கு நீரிழிவு நோய் அதிகரிப்பு

## யாழ். போதனாவின் நீரிழிவு சிகிச்சை நிபுணர் வைத்தியர் சி. அரவிந்தன்

(யாழ்ப்பாணம்)

கொரோனா காலப்பகுதியில் பாடசாலை சிறார்களிடையேயும், இளவயதினரிடையேயும் நீரிழிவு நோய் அதிகரித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் சிறப்பு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சிவமகாலிங்கம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கோவிட்- 19 போன்ற தொற்று நோய்களும் இன்று அதிகரித்திருக்கின்ற நிலையில் நீரிழிவு போன்ற தொற்றா நோய்களும் பெருகிவருகின்றது. மேலைத்தேய நாடுகளில் இருந்த நீரிழிவு நோய் இப்போது இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் பெருகி வருகிறது.

இலங்கையில் 80 களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஏறக்குறைய 3 சதவீதமானவர்களுக்குதான் நீரிழிவு நோய் இருந்தது. அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 30 சதவீத மானவர்களுக்கு நீரிழிவு நோயிருக்கிறது. யாழ். மாவட்டத்தில் 15 தொடக்கம் 20 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. இதற்கு எங்கள் வாழ்க்கை நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களே முக்கிய காரணங்கள் ஆகும். ஆரோக்கியமற்ற உணவுப்பழக்க வழக்கங்கள், மன அழுத்தங்கள், அப்பியாசப் பயிற்சிகள் அற்ற வாழ்க்கை முறைகள் தான் நீரிழிவு போன்ற தொற்றாநோய்கள் வருவதற்கு முக்கிய காரணங்களாகும்.

கோவிட் 19 பரவுகின்ற கடந்த ஆறு மாத காலத்தில் அதிகளவு இளைஞர் யுவதிகளுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இளம் சமுதாயத்தினரிடையே நீரிழிவு நோய் பெருகி வருகின்றது. ஆகவே அனைவரும் இந்த நீரிழிவு மாதத்தில் நீரிழிவு நோய் இருக்கின்றதா? இல்லையா? என்பதனைக் கண்டறிவது அவசியம்.

பாடசாலைச் சிறுவர்களிடையேயும் நீரிழிவு நோய் அதிகரித்துள்ளது. முன்னைய காலங்களில் சிறுவர்களுக்கு வகை - 01 எனப்படும் இன்சுலின் சுரப்பியில் ஏற்படுகின்ற பிரச்சினை இருந்தது. ஆனால் இன்று எத்தனையோ பேருக்கு வகை 02 எனப்படும் வளர்ந்தவருக்கு ஏற்படுகின்ற நீரிழிவு இருக்கின்றது. கொரோனா காலப்பகுதியில் வீட்டிலிருந்து அடிக்கடி உணவுகளை உண்பதால் உடற்பருமன் அதிகரிப்பும், இலத்திரனியல் உபகரணங்களுக்கு அடிமையாகி எந்தவொரு விளையாட்டுக்களிலும் ஈடுபடாமல் இருப்பது போன்றவை காரணங்களாக உள்ளன. ஆகவே, பெற்றோர்கள், ஆசிரியர்கள் இணைந்து சிறார்களுக்கு ஏற்படும் நீரிழிவு அபாயத்தை முன்கூட்டியே தடுப்பது அவசியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03,18)

வீடு விற்பனைக்கு உண்டு
பிரம்படி 2 ஆம் ஒழுங்கை கொக்குவிலில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
2 1/2 பரப்புக் காணி பிரம்படி லேன் 2ஆம் ஒழுங்கையில் வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
(4597)
076 702 3565

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கயாமாம்நணம் மல்லாவி துனுக்காய்

காணி விற்பனைக்கு வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோவில் சந்திக்கு அருகாமையில் ஆறு பரப்புக் காணி உள்ளது. **2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**
இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது. ஒரு பரப்பின் விலை இருபத்து ஐந்து இலட்சம் (2,500,000/=)
( தரகர் தேவையில்லை. )
(4643)
குரு : 077 585 8058

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய் ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-505)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.